# உதயன்

சுடர் : 37 | கதிர் : 344
சனிக்கிழமை 05 நவம்பர் 2022
ஐப்பசி 19 ஆம் நாள் வள்ளுவர் ஆண்டு 2053
பக்கங்கள்: 12 | விலை : ரூ. 50


## இலங்கையிலும் குரங்கு அம்மை!

யாழ்ப்பாணம், நவ. 5
இலங்கையில் முதலாவது குரங்கு அம்மைத் தொற்றாளர் அடையாளம் காணப்பட்டுள்ளார் என்றுசுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.
கடந்த முதலாம் திகதியன்று ஐக்கிய அரபு இராச்சியத்தில் இருந்து இலங்கை வந்த 20 வயதுடைய நபரே இவ்வாறு குரங்கு அம்மையுடன் அடையாளம் காணப்பட்டுள்ளார். இவ்வாறு அடையாளம் காணப்பட்டுள்ள நபர் களனி பிரதேசத்தைச் சேர்ந்தவர் என்று சுகாதார அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (அ-ம)

## நீரிழிவின் தாக்கம் வடக்கில் அதிகம்

யாழ்ப்பாணம், நவ. 5
வடக்கு மாகாணத்தில் நீரிழிவின் தாக்கம் அதிகரித்துள்ளது. யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில், இந்த வருடம் சுமார் 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட நீரிழிவு நோயாளர்களுக்கு சிகிச்சை வழங்கப்படுகின்றது என்று யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் நீரிழிவு அகஞ்சுரக்கும் 03 ▶

## யாழ்ப்பாணத்தில் டெங்கு தீவிரம்!

### அவதானமாக இருக்கும்படி சுகாதாரத்துறை அறிவுறுத்து

யாழ்ப்பாணம், நவ. 5
யாழ்ப்பாணம் மாவட்டத்தில் டெங்குத் தொற்று தீவிரம் பெற்றுள்ளது. தொற்றாளர்களின் எண்ணிக்கையும், டெங்குத் தொற்றால் உயிரிழப்போர் எண்ணிக்கையும் அதிகரித்து வருகின்றது. எனவே தொற்று 04 ▶

## ஹெரோய்னுடன் இளைஞன் கைது

யாழ்ப்பாணம், நவ. 5
மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சண்டிலிப்பாய்ப் பகுதியில் இளைஞரொருவர் ஹெரோய்னுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.
மானிப்பாய் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் மேற்கொண்ட சிறப்பு நடவடிக்கையின்போதே மேற்படி இளைஞர் கைதுசெய்யப்பட்டதுடன், அவரிடம் இருந்து 04 ▶



## நெடுங்கேணியில் கைக்குண்டு மீட்பு

வவுனியா, நவ. 5
வவுனியா வடக்கு, நெடுங்கேணிப் பகுதியில் கைக்குண்டொன்று நேற்று மீட்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
குறித்த பகுதியால் சென்ற நபரொருவரே மேற்படி கைக்குண்டை அவதானித்து, அது தொடர்பில் 04 ▶

# தமிழர்களின் எதிர்பார்ப்பை நிறைவேற்றியே தீருவோம்!

### புதிய அரசமைப்புத் தொடர்பில் நீதி அமைச்சர் தெரிவிப்பு



**கொழும்பு, நவம்பர் 5**

**புதிய அரசமைப்பின் ஊடாக அரசியல் தீர்வே தமிழ் மக்களின் பிரதான எதிர்பார்ப்பு. அதை நாம் நிறைவேற்றியே தீருவோம் - இவ்வாறு நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச தெரிவித்தார்.** 04 ▶

## மைத்திரிக்கு கொரோனா!

கொழும்பு, நவ. 5
முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.
கொரோனாத் தொற்றுக்கான அறிகுறிகள் தென்பட்டதன் காரணமாக அவர் 03 ▶

### நாட்டின் இந்த நிலைமைக்கு

## ரூ.500 க்கு வாக்குகளை விற்ற அனைவரும் பொறுப்பாளிகள்!

### கர்தினால் வெளிப்படைப் பேச்சு

கொழும்பு, நவ. 5
நாட்டின் இந்த நிலைமைக்கு 500 ரூபாவுக்கும் அரைப்போத்தல் சாராயத்துக்கும் வாக்குகளை விற்பனை செய்த அனைவரும் பொறுப்பாளிகள் - இவ்வாறு தெரிவித்தார் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை.
உலக குடியிருப்பு தினத்தை முன்னிட்டு நீர்கொழும்பில் நேற்று நடைபெற்ற 03 ▶

## வாள்வெட்டு நபர் நேற்றுக் கைது!

யாழ்ப்பாணம், நவ. 5
யாழ்ப்பாணத்தில் கடந்த மாதம் 8ஆம் திகதி அலைபேசி விற்பனை நிலையமொன்றின் உரிமையாளரை வாளால் வெட்டிய குற்றச்சாட்டில் பிரதான 04 ▶

### போலி உறுதி மோசடி வழக்கு

## பொலிஸாரின் புலன் விசாரணைக்கு சிறிகாந்தா தரப்பு கடும் அதிருப்தி!

யாழ்ப்பாணம், நவ. 5
யாழ்ப்பாணம் மாநகரில் போலி உறுதி மூலம் காணி மோசடி இடம்பெற்றமை தொடர்பான வழக்கில், பொலிஸாரின் புலன் விசாரணைகளுக்கு சட்டத்தரணி சிறிகாந்தா கடும் அதிருப்தி தெரிவித்தார். இதையடுத்து, சந்தேகநபர் தரப்பில் பொலிஸாருக்கு எதிராக 04 ▶

## கூடுதலான எரிபொருளுக்கு ஓட்டோக்களை பதிவுசெய்க

யாழ்ப்பாணம், நவ. 5
வடமாகாணத்தில் மேலதிகமாக எரிபொருள் தேவைப்படும் முச்சக்கரவண்டிச் சாரதிகள், தமது பதிவுகளை அந்தந்த மாவட்ட செயலகங்களில் உள்ள வீதிப்போக்குவரத்து அதிகார சபையின் அலுவலகங்களில் மேற்கொள்ளுமாறு வடமாகாண வீதிப்பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் தலைவர் இ.இரவீந்திரன் அறிவுறுத்தியுள்ளார். 12 ▶

## ஆசிரியர்களின் ஆடையில் மாற்றம் ஏற்படுத்தப்படாது!

### கல்வி அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, நவ. 5
யார் கோரிக்கை விடுத்தாலும் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கான ஆடையில், சீருடையில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு இடமளிக்கமாட்டேன். மேற்குலக கலாசாரத்தை இலங்கைக்குள் திணிக்கும் முயற்சிக்கு இடமளிக்கப்படமாட்டாது - இவ்வாறு கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.
ஆசிரியர்களுக்கு தமக்கு வசதியான ஆடைகளை அணிந்து 04 ▶

## ரயிலுடன் மோதுண்டு இளைஞன் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், நவ. 5
யாழ்ப்பாணம் - புங்கன்குளம் ரயில் கடவைப் பகுதியில், ரயிலுடன் மோதி உயிரை மாய்க்க முயற்சி செய்து குற்றுயிருடன் மீட்கப்பட்ட இளைஞர் சிகிச்சை பயனளிக்காமல் உயிரிழந்தார். இந்தச் சம்பவம் நேற்று மாலை இடம்பெற்றது.
பாண்டியன்தாழ்வுப் பகுதியைச் சேர்ந்த வெற்றிவேல் விஸ்னுயன் (வயது-21) என்ற இளைஞரே இவ்வாறு உயிரிழந்தவராவார். 12 ▶

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் நிறுவப்பட்டது டி.ஏ.ராஜபக்சவின் சிலை

கொழும்பு, நவ. 5

**கடந்த மே மாதம் 9 ஆம் திகதி தங்காலையில் போராட்டக்காரர்களால் வீழ்த்தப்பட்ட டி.ஏ.ராஜபக்சவின் உருவச்சிலை மீண்டும் மறுசீரமைக்கப்பட்டு அதேஇடத்தில் நேற்று நிறுவப்பட்டுள்ளது.**



இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச உள்ளிட்ட சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். டி.ஏ.ராஜபக்சவின் நினைவுதினம் நாளை கடைப்பிடிக்கப்படவுள்ளதுடன் அன்றைய தினம் சிலை மீண்டும் திறந்து வைக்கப்படும் என நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார். உருவச்சிலையை உடைப்பதற்காகச் சென்ற திட்டமிட்ட குழுவினருக்கு சட்டத்தின் மூலம் தண்டனை கிடைக்க வேண்டும் என்பது தனது நம்பிக்கை எனவும் நாமல் கூறியுள்ளார். டொன் அல்வின் ராஜபக்ச என்ற இயற்பெயரைக் கொண்ட டி.ஏ. ராஜபக்ச, அமைச்சராகவும் நாடாளுமன்ற பிரதி சபாநாயகராகவும் பதவி வகித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

(ஒ-இ)

## அரசியல் கட்சிகளால் மாணவர்கள் மோதல்

### களனி பல்கலையில் சம்பவம்

கொழும்பு, நவ. 5

மக்கள் விடுதலை முன்னணி மற்றும் முன்னிலை சோசலிசக் கட்சியின் மாணவர் குழுக்களுக்கு இடையில் ஏற்பட்ட மோதலில் ஐந்து பேர் காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

களனி பல்கலைக்கழகத்தின் கன்னங்கரா விடுதியில் இந்த மோதல் சம்பவம் இடம்பெற்றுள்ளது.


மோதலில் காயமடைந்த மாணவர்கள் வீட்டுக்கு அனுப்பப்பட்ட போதிலும் அவர்கள் வீடுகளுக்குச் செல்லாமல் மருத்துவமனைகளுக்குச் சென்றுள்ளனர். இது தொடர்பில் மருத்துவமனை பொலிஸாருக்கும், களனி பொலிஸாருக்கும் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (ஒ-இ)

## மசகு எண்ணெய் விலை சரிவு

கொழும்பு, நவ. 5

உலக சந்தையில் மசகு எண்ணெய் விலை மேலும் குறைந்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

சீனாவின் எரிபொருள் தேவை குறைந்ததாலும், அமெரிக்காவில் வட்டி விகிதம் மீண்டும் உயரும் என்ற வியூகத்தால் உலக சந்தையில் மசகு எண்ணெய் விலை பாதிக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. பிரன்ட் ரக மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 94.45 டொலராகக் குறைந்துள்ளது. (ஒ-இ)




## முட்டை விலை உயரவில்லை!

கொழும்பு, நவ. 5

முட்டை விலை அதிகரிக்கப்படவில்லை என நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது.

முட்டை ஒன்றின் விலையை 7 ரூபாவுக்கும், 10 ரூபாவுக்கும் இடைப்பட்ட அளவில் குறைக்க முடியும் அகில இலங்கை முட்டை வர்த்தகர்கள் சங்கம் முன்னர் குறிப்பிட்டிருந்தது.

தற்போது முட்டை விலையை அதிகரிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது என வெளியாகும் தகவல் உண்மைக்குப் புறம்பானது.

வர்த்தகர்கள் முட்டையை கட்டுப்பாட்டு விலைக்கும் அதிகமாக விற்பனை செய்து வருகின்றனர். அவர்களை அடையாளங்காண்பதற்கான சுற்றிவளைப்புக்கள் தொடர்கின்றன என நுகர்வோர் விவகார அதிகாரசபை மேலும் தெரிவித்துள்ளது. (ச-இ)



## கண்ணீர் அஞ்சலி



எமது திணைக்களத்தில் கடற்றொழில் பரிசோதகராக கடமையாற்றும் **தர்மசீலன் கணேஸ்வரன்** அவர்களின் அன்புத் தந்தையார்

**துரையப்பா தர்மசீலன்**

அவர்கள் 03.11.2022 ஆம் திகதி வியாழக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார். அன்னாரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதுடன் அவரது பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**உதவிப் பணிப்பாளரும் பணியாளர்களும்.**

**மாவட்ட அலுவலகம்**
**கடற்தொழில் நீரியல் வளத்துறைத் திணைக்களம், யாழ்ப்பாணம்.**

(CS 42402) 16

## ராஜா பிளாசா மாதிரிக்கிராமம்
## 100 வீட்டுத்திட்ட வீட்டுப் பயனாளிகளுக்கு காணி உறுதிப் பத்திரம் வழங்கும் நிகழ்வு

தலைவர்
**கணிதச்சுடர் திரு. சண். வாமதேவன்**
(ஓய்வுநிலை அதிபர்)

- காலம் : **05.11.2022, சனிக்கிழமை**
- நேரம் : **மாலை 03.30 மணி**
- இடம் : **இராஜேஸ்வரி திருமண மண்டபம் (பலாலி வீதி, கோண்டாவில்)**

பிரதம விருந்தினர்
**உயர்திரு. நாகலிங்கம் வேதநாயகன்**
(ஓய்வு நிலை மாவட்ட செயலர் - மாவட்ட செயலகம் யாழ்ப்பாணம்)

கல்விக்கொடையாளர்
**திரு. திருமதி இராசையா குவேந்திரநாதன் றஞ்சினிதேவி**
உரிமையாளர் - ராஜா பிளாசா கோண்டாவில்)

சிறப்பு விருந்தினர்கள்
**உயர்திரு. சுப்பிரமணியம் முரளீதரன்**
உதவி அரசாங்க அதிபர் காணி - மாவட்டச் செயலகம் யாழ்ப்பாணம்)

**உயர்திரு. தவச்செல்வம் முகுந்தன்**
(பிரதேச செயலர் - பிரதேச செயலகம் - உடுவில்)

**திருமதி சுபாசினி மதியழகன்**
(பிரதேச செயலர் - பிரதேச செயலகம் - கோப்பாய்)

**கலாநிதி செல்லத்துரை திருமாறன்**
(உரிமையாளர் - ராஜேஸ்வரி திருமண மண்டபம் - கோண்டாவில்)

மேற்படி நிகழ்வு இனிதே நடைபெற இறையருள் வேண்டி வாழ்த்துகின்றோம்!

**விஸ்ரா விஷன்**
**347, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.**

21608) (2.6)

## யாழ்ப்பாணம் பல நோக்கு கூட்டுறவுச்சங்கம் (வ-து)
## கேள்வி அறிவித்தல்

இல 127 கே.கே.எஸ் வீதியில் அமைந்துள்ள தலைமை அலுவலகக் கட்டடத்தின் 2ம் தளத்தில் இடது பக்கமாக உள்ள அலுவலகக் கட்டடம் மற்றும் கீழ் தளத்தின் இடது பக்கமாக உள்ள 2 வது கடைக் கட்டடம் வாடகைக்கு வழங்குவதற்கான கூறுவிலை கோரல்.

01. யாழ்ப்பாணம் பல நோக்கு கூட்டுறவுச்சங்கத்திற்கு சொந்தமான இல. 127, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் உள்ள தலைமை அலுவலகத்தின் இடது பக்கமாக உள்ள 2ம் மாடியிலுள்ள அலுவலகக் கட்டடம் வாடகைக்கு வழங்குவதற்காக, பொருத்தமான அரச / தனியார் நிறுவனங்களிடமிருந்து வாடகை தொடர்பான கூறு விலைகள் கோரப்படுகின்றது. அலுவலகக் கட்டடம் கிட்டத்தட்ட 3400 சதுர அடி பரப்பளவினைக் கொண்டதும், போதிய வாகனத் தரிப்பிட வசதி கொண்டதும்.

02. யாழ்ப்பாணம் பல நோக்கு கூட்டுறவுச்சங்கத்திற்கு சொந்தமான இல. 127, கே.கே. எஸ் வீதியில் அமைந்துள்ள கீழ்த்தளத்தில் இடது பக்கமாக அமைந்துள்ள 45 X 15 சதுர அடி பரப்பளவு கொண்ட சகல வசதிகளுடன் (வாகன தரிப்பிட வசதி) கூடிய இரண்டாவது கடைக்கட்டடமும் வாடகைக்கு வழங்கப்படும். சங்கம் நடத்தும் தொழில்கள் சேவைகள் தவிர்ந்ததும், மற்றும் மதுபான விற்பனையுடன் தொடர்புடைய வியாபாரம் தவிர்ந்த ஏனைய துறை சார்ந்த தொழில்கள், அமைப்புக்கள் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்கள், நிறுவன முகவர்களுக்கு வழங்கப்படும்.

கடைக்கட்டடத்தைப் பார்வையிட விரும்புவோர் மற்றும் ஏனைய விபரங்களை சங்க தலைமைக்காரியாலயத்தில் நேரிலோ அல்லது தொலைபேசி இலக்கத்துடன் (021 222 2587) அலுவலக நேரத்தில் திங்கட்கிழமை - வெள்ளிக்கிழமை வரை காலை 8.30 மணி தொடக்கம் மாலை 5.00 மணி வரையிலும், சனிக்கிழமைகளில் காலை 8.30 மணி தொடக்கம் 1.30 மணி வரையிலும் தொடர்பு கொள்ளவும்.

**விண்ணப்ப முடிவு திகதி :- 12.11.2022**

**விண்ணப்பிக்கும் முறை :** மேற்படி கூறுவிலைக்கான விண்ணப்பப்படிவத்தினை சங்கத்தின் தலைமைக்காரியாலயத்தில் ரூபா 10.00 இனை செலுத்திப்பெற்று, கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் **"கடைக் கட்டடம் வாடகைக்குப் பெறுவதற்கான கூறுவிலை "** எனக்குறிப்பிட்டு **தலைவர், யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் - வ-து, இல 127, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம்.** என்னும் முகவரிக்கு **2022.11.12** ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

**தலைவர்,**
**யாழ்ப்பாணம் பல நோக்கு கூட்டுறவுச்சங்கம் (வ-து)**

(CR 38441 )(3/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடக்கு மாகாணத்தின் எரிபொருள் நிரப்பு நிலையங்களின் உரிமையாளர்கள் இன்று சந்திப்பு!

வடக்கு மாகாணத்தின் எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்களின் அவசரக் கலந்துரையாடல் ஒன்று யாழ்ப்பாணம் பொதுநூலகத்தில் இன்று 5ஆம் திகதி சனிக்கிழமை இடம்பெறவுள்ளது.

எரிபொருள் விநியோகம் தொடர்பான விடயங்களில் வெளிநாட்டு நிறுவனங்களை அரசு நாடுகின்றமை, அரசாங்கத்தால் எரிபொருள் விநியோகஸ்தர்களுக்கு வரும் இலாபம் குறைக்கப்பட்டுள்ளமை மற்றும் வடமாகாண மக்களின் வாழ்வாதார எரிபொருள் விநியோகத்தைச் சீராக்கல் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் இந்தச் சந்திப்பின்போது கவனம் செலுத்தப்பட்டு கலந்துரையாடப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தக் கலந்துரையாடலில் கொழும்பில் உள்ள தாய்ச் சங்கத்தை சேர்ந்த முக்கியமான பிரதிநிதிகளும் கலந்துகொள்வர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (அ-ம)

# வெளிநாட்டவர்களை திருமணம் செய்தல்; வரையறைகளைத் தளர்த்தத் தீர்மானம்

### பதிவாளர் திணைக்களம் தெரிவிப்பு

**கொழும்பு, நவ. 5**

**வெளிநாட்டவர்கள் மற்றும் இலங்கையர்களுக்கிடையில் திருமணப்பதிவை மேற்கொள்வதில் காணப்படும் வரையறைகளைத் தளர்த்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக பதிவாளர் திணைக்களம் தெரிவித்துள்ளது.**

அதற்கமைய 2021 இலக்கம் 18 சுற்றுநிருபத்தை இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பதிவாளர் நாயகம் பீ.எஸ்.பி.அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

குறித்த சுற்றுநிருபத்துக்கு அமைய இலங்கையர்கள் திருமணம் செய்வதற்குத் தயாராகும் வெளிநாட்டவர்கள் சிறந்த உடல் நலத்துடன் இருப்பதாக சுகாதார அறிக்கையை சமர்ப்பிக்கவேண்டும். இதற்கு மேலதிகமாக, எந்தவொரு குற்றங்களுடனும் தொடர்புடையவர் அல்லர் என்று பாதுகாப்புத் துறையிடமிருந்து அறிக்கையொன்றையும் சமர்ப்பிக்க வேண்டியது கட்டாயமாகும் என்ற நிபந்தனையும் காணப்பட்டது.

இந்த நிபந்தனைகளைத் தளர்த்துமாறு பிரதமர் தினேஷ் குணவர்த்தன ஆலோசனை வழங்கியுள்ளார்.

இதற்காக முன்னெடுக்க வேண்டிய மாற்று வழிமுறை தொடர்பில் அவதானம் செலுத்துமாறும், பாதுகாப்பு அமைச்சு மற்றும் சுகாதார அமைச்சுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக பதிவாளர் நாயகம் பீ.எஸ்.பி.அபேவர்த்தன மேலும் தெரிவித்துள்ளார். (அ-ம)

### ரூ.500க்கு...

நிகழ்வொன்றில் பங்கேற்று உரையாற்றியபோதே அவர் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

'அரசியல் தலைவர்கள் பொதுமக்களின் பிரச்சினைகள் குறித்து உணர்வுபூர்வமாகச் சிந்திப்பதில்லை. இதன் காரணமாகவே சர்வதேச நாடுகளிடம் எங்களின் இயலாமையைக் கூறி கையேந்த வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம். முறையற்ற கொள்கைகள் மற்றும் தீர்மானங்கள் காரணமாக நாடு பெரியளவில் பின்னோக்கிச் சென்றுள்ளது. இந்த நிலைமை காரணமாகவே 1978 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இருந்து நாடு மோசமான நிலைமைக்குச் சென்று கொண்டிருக்கின்றது.

சட்டம் என்ற கட்டமைப்பு முற்றிலும் சீர்குலைந்துள்ளது. நாங்கள் சுதந்திரமாக இருக்கின்றோமா? இந்தியாவுக்கும், சீனாவுக்கும், அமெரிக்காவுக்கும், ஐரோப்பிய ஒன்றியத்துக்கும் அடிபணிந்து அவர்களிடம் கையேந்துகின்றோம். அதேபோன்று சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளுக்கு தலைசாய்த்து இந்த நாட்டை இவ்வாறான நிலைமைக்குக்கொண்டுசென்றுள்ளார்கள். இதற்கு முழுமையான பொறுப்பை அரைப் போத்தல் சாராயத்துக்கும், 500 ரூபாவுக்கும் வாக்குகளை விற்பனை செய்த அனைவரும் ஏற்றுக்கொள்ளவேண்டும்.

நிர்வாகம் செய்ய முடியாதவர்கள் வீட்டுக்குச் செல்லவேண்டும். அரசமைப்புப் பரிந்துரையை மேற்கொள்வதற்காக ஜனாதிபதி ஒரு குழுவை நியமித்தார். அந்தக் குழுநாட்டில் உள்ள முக்கியமான தரப்பினர் யாரிடமும் சென்று பரிந்துரைகளைப் பெறவில்லை. அரசமைப்புத் திருத்த பரிந்துரைக் குழுவினர் தன்னிச்சையாகத் தயாரித்த அறிக்கையை நடைமுறைப்படுத்தினால் நாட்டின் எதிர்காலம் அதலபாதாளத்துக்குச் செல்லும் என்பது திண்ணம் - என்றார். (அ-ம-22)

### மைத்திரிக்கு...

ஐ.டி.எச். மருத்துவமனைக்கு சிகிச்சைக்காகச் சென்ற நிலையிலேயே அவருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. தற்போது அவர் மருத்துவக் கண்காணிப்பில் உள்ளார் என்றும் தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (அ-ம)

### நீரிழிவின்...

தொகுதி சிறப்பு மருத்துவ நிபுணர் அரவிந்தன் தெரிவித்துள்ளார்.

வடபகுதியில் நீரிழிவு நோயின் தாக்கம் அதிகரித்துள்ளமை தொடர்பில் கருத்துரைக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நீரிழிவு நோய் தொடர்பான தேசியத் தகவல்களின் அடிப்படையில் கொழும்பில் சுமார் 30 வீதமானவர்களுக்கு இந்த நோயின் தாக்கம் உணரப்பட்டுள்ளது. அதேபோன்று யாழ்ப்பாணத்தில் 15 வீதமானவர்கள் இந்த நோயின் தாக்கம் உள்ளவர்களாக அவதானிக்கப்பட்டுள்ளனர். கடந்த இரண்டு வருட காலப்பகுதியில் இளைஞர்கள் மற்றும் யுவதிகளிடம் (குறிப்பாக 20 வயது தொடக்கம் 30 வயது வரையானவர்களிடம்) நீரிழிவின் தாக்கம் அதிகரித்துச் செல்கின்றது.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் கடந்த வருடத்தோடு ஒப்பிடும்போது இந்த வருடம் சுமார் 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட நோயாளர்கள் கூடுதலாகச் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

நவம்பர் மாதம் உலகளாவிய ரீதியில் நீரிழிவு விழிப்புணர்வு வாரமாகக் கொண்டாடப்படுகின்றது. குறிப்பாக இந்த உலக நீரிழிவு விழிப்புணர்வு வாரத்தில் யாழ். மாவட்டத்தில் பல செயற்றிட்டங்கள் செயற்படுத்தப்படவுள்ளன. மிக முக்கியமாக பாடசாலை மாணவர்கள் மத்தியில் மற்றும் கல்லூரி மாணவர்கள் மத்தியில் நீரிழிவு தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துவது அவசியமானது.

நீரிழிவு நோயின் தாக்கம் அதிகரித்தமைக்கு எமது உணவுப் பழக்கத்தில் ஏற்பட்ட மாற்றமும் ஒரு காரணமாக இருக்கின்றது. உதாரணமாக, மேலைத்தேய உணவுகள் மற்றும் துரித உணவுகளில் நாட்டம் அதிகரித்துச் செல்வதால் நீரிழிவின் தாக்கமானது அதிகரித்துச் செல்வதை நாங்கள் காணக்கூடியதாகவுள்ளது. அதேபோல் மன அழுத்தம், குறைவான தூக்கம் என்பனவும் நீரிழிவு அதிகரித்துச் செல்வதற்கான காரணங்களாக உள்ளன.

நீரிழிவு நோய்க்கு நாம் உட்படும்போது, எமக்குச் சில அறிகுறிகள் தென்படும். அந்த அறிகுறிகளை நாங்கள் அடையாளம் கண்டு உரிய முறையில் சிகிச்சை மேற்கொள்ளும்போது குறித்த நோயிலிருந்து தப்பித்துக் கொள்ள முடியும். எனவே வட பகுதியில் உள்ள மக்கள் இந்த நீரிழிவு நோய் தொடர்பில் மிகவும் விழிப்பாக இருக்க வேண்டியது அவசியமாகும் - என்றார். (அ-ம-26)

## இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். துணிச்சலாக முடிவெடுப்பீர்கள். அதனால் நன்மையே ஏற்படும். எதிர்ப்புகளும் விமர்சனங்களும் நீங்கும். பிள்ளைகள் ஆலோசனை கேட்டு வருவார்கள்.

**இடபம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். சகோதரர்களால் அனுகூலம் உண்டாகும். சிலருக்கு புதிய ஆடை, ஆபரணங்களின் சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டு.

**மிதுனம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. உறவினர்களால் குடும்பத்தில் சிறு சிறு குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும்.

**கடகம்:** இன்று எதிலும் பொறுமையுடனும் சிந்தித்தும் செயற்பட வேண்டிய நாள். பிள்ளைகள் பிடிவாதம் பிடித்தாலும் அனுசரித்துச் செல்லவும். வியாபாரத்தில் பணியாளர்களால் சில பிரச்சினைகள் ஏற்பட்டு நீங்கும்.

**சிம்மம்:** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. உறவினர்கள் மூலம் ஆதாயம் கிடைக்கும். சகோதரர்கள் உதவி கேட்டு வருவார்கள். உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும்.

**கன்னி:** தேவையான பணம் இருப்பதால் செலவுகளைச் சமாளித்து விடுவீர்கள். உறவினர்கள் ஆலோசனை கேட்டு வருவார்கள். சகோதரர்களால் சங்கடங்கள் ஏற்பட்டாலும் பாதிப்பு இருக்காது.

**துலாம்:** பல வகைகளிலும் அனுகூலமான நாளாக இருக்கும். தந்தையிடம் எதிர்பார்த்த பணஉதவி கிடைக்கும். பிள்ளைகள் மூலம் பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. நண்பர்கள் கேட்கும் உதவியை மகிழ்ச்சியுடன் செய்வீர்கள்.

**விருச்சிகம்:** மனதுக்கு மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் நிகழும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. கணவன் – மனைவிக்கிடையே அந்நியோன்னியம் அதிகரிக்கும்.

**தனுசு:** எதிர்பார்த்த பணவரவு இருந்தாலும், எதிர்பாராத செலவுகளும் ஏற் படும். பிள்ளைகளால் சில சங்கடங்கள் ஏற்படும். அக்கம்பக்கத்தில் இருப்பவர்களுடன் இணக்கமாக நடந்துகொள்ளவும்.

**மகரம்:** மகிழ்ச்சியான நாள். குடும்பப் பொறுப்புகளில் உற்சாகமாக ஈடுபடுவீர்கள். பிள்ளைகள் கேட்பதை மகிழ்ச்சியுடன் வாங்கிக் கொடுப்பீர்கள். உங்கள் முயற்சிக்கு பெற்றோரின் ஆதரவு கிடைக்கும்.

**கும்பம்:** தொடங்கும் காரியங்கள் சாதகமாக முடியும். சிலருக்கு திடீர்ச் செலவுகளால் கையிருப்புக் குறையும். நண்பர்களின் சந்திப்பு மகிழ்ச்சி தருவதாக இருக்கும்.

**மீனம்:** குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பதில் பெரியவர்களின் ஆலோசனை அவசியம். சிலருக்கு எதிர்பாராத பணவரவும் திடீர்ச் செலவுகளும் ஏற்படும். சகோதரர்கள் உதவி கேட்டு வருவார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழர்களின்...

அவர் மேலும் தெரிவிக்கையில்;

'எம்மைச் சந்திக்கும் சர்வதேசப் பிரதிநிதிகளும் புதிய அரசமைப்பு தொடர்பிலும், தேசிய இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு தொடர்பிலும் முக்கியத்துவம் வழங்கிக் கலந்துரையாடி வருகின்றனர்.

எனவே, இந்த விடயத்தில் நாம் முழு அர்ப்பணிப்புடன் செயற்படுவோம். ஒரு வருடத்துக்குள் தீர்வுக்கான அனைத்துப் பணிகளும் நிறைவுக்கு வரவேண்டும் என்பதை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எம்மிடம் தெரிவித்துள்ளார்.

அதற்கு முன் கைதிகள் விவகாரம் (தமிழ் அரசியல் கைதிகள்), காணி விவகாரம் தொடர்பில் ஆராய்ந்து அதற்குரிய தீர்வுகளை அரசு வழங்கும். அதன் ஓர் அங்கமாகவே கைதிகள் (தமிழ் அரசியல் கைதிகள்) சிலர் விடுவிக்கப்பட்டுள்ளனர். ஏனையோரும் விரைவில் விடுவிக்கப்படுவார்கள்.

நல்லாட்சி அரசில் தீர்வு விடயத்துக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முழுமையான ஒத்துழைப்பை வழங்கியது. ஆனால், தற்போது கூட்டமைப்பின் ஒத்துழைப்பு எமக்குக் கிடைக்கவில்லை என்று அர்த்தம் இல்லை. ஒத்துழைப்பு கிடைக்கின்றது. ஆனால், அந்த ஒத்துழைப்பு முழுமையான ஒத்துழைப்பாக இருக்கவேண்டும்.

வடக்கு - கிழக்கில் காணி விவகாரம் தொடர்பில் பல முறைப்பாடுகளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் எம்மிடம் முன்வைத்துள்ளனர். இவை தொடர்பில் நாம் நேரில் ஆராய்ந்து விரைந்து தீர்வுகாண்போம். எந்தத் தரப்பும் பாதிக்காத வகையில் நாம் தீர்மானங்களை எடுப்போம்' - என்றார். (அ-ம-22)

## ஹெரோய்னுடன்...

40 மில்லிகிராம் ஹெரோய்ன் மீட்கப்பட்டுள்ளது. குறித்த இளைஞர் மல்லாகம் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டதை அடுத்து அவரை ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான சரீரப்பிணையில் செல்லுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது. (அ-ம-125)

## யாழ்ப்பாணத்தில்...

மேலும் தீவிரமாகாமல் இருக்கவும் தொற்றுக்கு தாம் உட்படாமல் இருக்கவும் வேண்டிய அனைத்து நடவடிக்கைகளையும் பொதுமக்கள் பின்பற்றவேண்டும் என்று யாழ். மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆறுமுகம் கேதீஸ்வரன் தெரிவித்தார்.

தனது அலுவலகத்தில் நேற்று ஊடக சந்திப்பை ஏற்பாடு செய்ததன் பின்னர் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ். மாவட்டத்தில் டெங்கு நோய் அதிகரித்துச் செல்வதை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது. யாழ். மாவட்டத்தில் இந்த வருடம் இதுவரையான காலப்பகுதியில் 2 ஆயிரத்து 774 வரையானோர் டெங்கு நோயாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். 8 பேர் இந்த வருடத்தில் உயிரிழந்துள்ளனர். கடந்த வருடங்களுடன் ஒப்பிடுகையில் இந்த வருடம் தொற்றின் தாக்கம் தீவிரமாகவுள்ளது. தற்போது மழைக்காலம் என்பதால் பொதுமக்கள் கூடுதல் அவதானத்துடன் செயற்படவேண்டும். டெங்கு நுளம்பு சுத்தமான தண்ணீர்ப் பரப்பிலேயே பல்கிப்பெருகும். ஆதலால், ஒவ்வொரு குடியிருப்பாளர்களும் தாம் சார்ந்த பகுதிகளில் துப்புரவைச் சரிவரப் பேணி ஒத்துழைப்புத் தரவேண்டும்.

இந்தக் காலப்பகுதியிலே காய்ச்சல் ஏற்பட்டால் அது பெரும்பாலும் டெங்கு நோயாக இருப்பதற்கான சாத்தியக் கூறுகள் காணப்படுகின்றன. எனவே பொதுமக்கள் தாமதிக்காது உடனடியாகவே மருத்துவ ஆலோசனையைப் பெற்றுக்கொள்ளவேண்டும். தாமதமாக மருத்துவமனைகளை நாடுகின்றமையே இறப்புகள் ஏற்படுவதற்குக் காரணம் - என்றார். (அ-ம-125-26)

## நெடுங்கேணியில்...

பொலிஸாருக்குத் தகவல் வழங்கியுள்ளார். இதையடுத்து சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் சிறப்பு அதிரடிப் படையினரின் உதவியுடன் கைக்குண்டை மீட்டதுடன் அதனைச் செயலிழக்கச் செய்துள்ளனர். குறித்த கைக்குண்டு போர்க் காலத்தில் பயன்படுத்தப்பட்ட ஜே.ஆர். வகைக்குண்டு என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-18)

## ஆசிரியர்களின்...

பணிக்குவர இடமளிக்கவேண்டும் என இலங்கை ஆசிரியர் சங்கம் கல்வி அமைச்சிடம் கோரிக்கை விடுத்திருந்தது. இதற்கு மகாசங்கத்தினர் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.

இந்த நிலையிலேயே கல்வி அமைச்சரும் இவ்வாறு அறிவித்துள்ளார்.

'மாணவர்களின் ஒழுக்கத்தில்தான் பாடசாலைக் கட்டமைப்பு தங்கியுள்ளது. எனினும், மேற்குலகக் கலாசாரத்தை இங்கு திணிப்பதற்கு சிலர் முற்படுகின்றனர். இதற்கு இடமளிக்கப்படமாட்டாது. ஆடையில் மாற்றம் ஏற்படுத்த அனுமதி இல்லை. இன்று ஆடையை மாற்றச் சொல்பவர்கள் நாளை மூளைச்சலவை செய்யலாம். 99 சதவீத ஆசிரியர்களும் இதற்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளனர். எமது கலாசாரத்தை நாம் காப்போம்' - என்றார். (அ-ம-44)

## வாள்வெட்டு...

சந்தேகநபரொருவர் யாழ்ப்பாணம் மாவட்ட பொலிஸ் புலனாய்வுப் பிரிவினரால் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் 34 வயதுடையவர். அவர் தெல்லிப்பழையைச் சேர்ந்தவர் என்று தெரிவித்துள்ள புலனாய்வுப் பிரிவினர், குறித்த சந்தேகநபரை யாழ்ப்பாணப் பொலிஸாரிடம் பாரப்படுத்தியுள்ளனர். இந்த வழக்கில் மேலுமொரு சந்தேகநபர் ஏற்கனவே நீதிமன்றில் சரணடைந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

## பொலிஸாரின்...

முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்களை பரிசீலித்து அறிக்கை சமர்ப்பிக்க யாழ்ப்பாணம் பிரதிப் பொலிஸ் மா அதிபருக்கு நீதிமன்றம் கட்டளையிட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மேலதிக நீதிவான் திருமதி நளினி சுபாஸ்கரன் இந்தக் கட்டளையை நேற்று வழங்கினார்.

யாழ்ப்பாணம் மாநகரில் காணி ஒன்று, ஏற்கனவே இறந்துபோய்விட்ட உரிமையாளர்களான தம்பதியின் போலிக் கையொப்பங்கள் மூலம் நிறைவேற்றப்பட்ட உறுதியினால் மோசடியாக உரிமை மாற்றம் செய்யப்பட்டது. அது தொடர்பாக யாழ்ப்பாணம் சிறப்புக் குற்ற விசாரணைப் பிரிவினரிடம் முறைப்பாடு செய்யப்பட்டது.

முறைப்பாடு தொடர்பில் விசாரணைகளை நடத்திய பொலிஸார், யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் வழக்கைத் தொடுத்து சந்தேகநபர் ஒருவரைக் கைதுசெய்து நீதிமன்றில் முற்படுத்தினர். பொலிஸாரின் புலன் விசாரணைகள் நிறைவடையாத நிலையில் சந்தேகநபர் கடந்த மூன்று வாரங்களாக விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். இந்தநிலையில் மீண்டும் வழக்கு நீதிமன்றில் நேற்று விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது.

அப்போது தமது புலன்விசாரணை தொடர்பான தொடர் அறிக்கையை பொலிஸ் தரப்பு தாக்கல் செய்தது. புலன் விசாரணை தொடர்வதால் சந்தேகநபரை தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றிடம் பொலிஸார் விண்ணப்பம் செய்தனர்.

மோசடியில் சம்பந்தப்பட்ட ஏனைய சந்தேகநபர்கள் ஏன் இன்னமும் கைது செய்யப்படவில்லை? என்று மன்று கேள்வி எழுப்பியது. சந்தேகநபர் சார்பில் முன்னிலையான மூத்த சட்டத்தரணி என். சிறிகாந்தா புலன் விசாரணை தொடர்பில் பொலிஸ் தரப்புக்கு எதிராக சரமாரியான குற்றச்சாட்டுக்களை நீதிமன்றில் முன்வைத்தார்.

'பொலிஸார் நேர்மையான முறையில் செயற்படாமல் இந்தக்காணி மோசடியுடன் சம்பந்தப்பட்ட சில நபர்களை தொடர்ந்து பாதுகாத்து வருகின்றனர். மோசடி உறுதி நிறைவேற்றப்பட்டதில் வெளிப்படையாகவே பங்குபற்றிய பிரசித்த நொத்தாரிசு மற்றும் இரண்டு சாட்சிகள் ஆகியோரின் வாக்குமூலங்களைப் பதிவு செய்த போதிலும் அவர்களை இதுவரை மன்றில் முற்படுத்தவில்லை. காணி உரிமையாளர்களான இறந்த தம்பதியரில் ஒருவரின் கையொப்பத்தை காணி உறுதியில் மோசடியாக இட்டுள்ள முன்னாள் பிரபல கல்லூரி அதிபர் மீது இதுவரை எந்த நடவடிக்கையும் இல்லை. இவர்களை மன்றில் முற்படுத்துமாறு நீதிமன்று ஏற்கனவே அறிவுறுத்தியதற்கு மாறாக பொலிஸார் தொடர்ந்து செயற்படுகின்றனர். இது சட்டத்துக்கு புறம்பானது. ஒன்றில் நேர்மையான முறையில் முழுமையான புலன்விசாரணை செய்யப்படவேண்டும் அல்லது இந்தப் புலன்விசாரணை கைவிடப்படவேண்டும். இதில் எதைச் செய்யப் போகின்றார்கள் என்பதைப் பொலிஸார் நீதிமன்றுக்குத் தெரிவிக்கவேண்டும்' என்று மூத்த சட்டத்தரணி சிறிகாந்தா சமர்ப்பணம் செய்தார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அந்தச்சந்தர்ப்பத்தில் குறுக்கிட்ட பொலிஸ் தரப்பினர், பிரசித்த நொத்தாரிசைத் தேடி அவரின் வீட்டுக்கு தாம் இரு தடவை சென்றதாகவும், ஆனால், அவர் அங்கிருக்கவில்லை எனவும் தமது தொலைபேசி அழைப்புக்களை அவர் ஏற்றுக்கொள்ளவில்லை என்றும் மன்றுரைத்தனர்.

இதற்குப் பதிலாக, 'குறித்த பிரசித்த நொத்தாரிசு சட்டத்தரணி என்ற முறையில் யாழ்ப்பாணம் நீதிமன்றத்துக்குச் சமுகமளித்து வருகின்றார்' என்றும் ஏனைய சந்தேகநபர்கள் தொடர்ந்தும் யாழ்ப்பாணத்திலேயே தங்கியுள்ளனர் என்றும் உறுதியாகக் கூறமுடியும் என்று குறிப்பிட்ட சட்டத்தரணி சிறிகாந்தா, சட்டத்தையும் நீதிமன்றத்தையும் ஏமாற்ற முடியும் என்று நினைக்காதீர்கள். குறித்த சந்தேகநபர்களுக்கு எதிராக உங்கள் விரல்கள் இன்னமும் ஏன் நீட்டப்படவில்லை என்பதற்கான காரணம் எங்களுக்கு நன்றாகத் தெரியும். எல்லாக் குற்றங்களையும் ஒருவரின் தலையில் பொலிஸார் சுமத்தப் பார்க்கின்றனர். இது பலர் சம்பந்தப்பட்ட மோசடி. அனைத்து நபர்களும் நீதிமன்றில் நிறுத்தப்படவேண்டும். பொதுமக்களின் கவனத்தை இந்த வழக்கு ஈர்த்திருக்கின்றது. இது பாரதூரமான விவகாரம். எனது கட்சிக்காரரான சந்தேகநபர் என்னைக் கேட்டுக் கொண்டிருந்த போதிலும் இன்றும் நான் பிணை கோரவில்லை' என்று சிறிகாந்தா மன்றுரைத்தார்.

சந்தேகநபர் சார்பாக முன்வைக்கப்பட்ட சமர்ப்பணங்கள் பதிவு செய்யப்பட்டதைத் தொடர்ந்து கட்டளை ஒன்றை வழங்கிய மேலதிக நீதிவான், வழக்கு நடவடிக்கைகளின் பதிவு யாழ்ப்பாணம் பிரதிப் பொலிஸ் மா அதிபருக்கு அனுப்பி வைக்கப்படவேண்டும் என்றும், அதன் மீதான அவரின் அறிக்கை அடுத்த தவணை மன்றில் சமர்ப்பிக்கப்படவேண்டுமென்றும் உத்தரவிட்டார்.

அந்தச்சந்தர்ப்பத்தில், சந்தேகநபர் விளக்கமறியலில் வைக்கப்படுவதைக் கருத்திற்கொண்டு அடுத்த தவணையை இருவார காலத்துக்குப் பதிலாக ஒருவார காலம் முடிவில் நிச்சயிக்குமாறு மூத்த சட்டத்தரணி சிறிகாந்தா கோரியதை பரிசீலித்த மன்று, எதிர்வரும் பதினோராம் திகதி வழக்கு மீண்டும் எடுத்துக் கொள்ளப்படும் என்று உத்தரவிட்டது. (அ-ம-26)


# மரண அறிவித்தல்



**திரு.வேலுப்பிள்ளை செல்வரத்தினம்**

இலங்கை மின்சார சபையின் ஓய்வுபெற்ற பிரதிப் பொது முகாமையாளர் (DGM), பட்டய மின் பொறியியலாளர்

திரு.வேலுப்பிள்ளை செல்வரத்தினம் அவர்கள் யாழ்ப்பாணம் உடுப்பிட்டியில் பிறந்து இலங்கை வெள்ளவத்தையில் வசித்து 2022 நவம்பர் 01 செவ்வாய்க்கிழமை அன்று அவரது இல்லத்தில் நிம்மதியாக காலமானார். மறைந்த சின்னத்தம்பி வேலுப்பிள்ளை மற்றும் காலஞ்சென்ற பொன்னம்மா வேலுப்பிள்ளை ஆகியோரின் அன்பு மகனும், மறைந்த எஸ் வைத்திலிங்கம் மற்றும் காலஞ்சென்ற செல்லமுத்து வைத்திலிங்கம் ஆகியோரின் மருமகனும், சிவதேவியின் அன்பான கணவர் ஷோபிதா, அஜந்தன் மற்றும் ஜெய்பிதா ஆகியோரின் அன்பு தந்தை, டாக்டர் ஜெயசங்கர் மற்றும் டாக்டர் செந்தூரனின் அன்பு மாமனார் ஷஜேஷ், தஸ்மிதா, ஷிவேஷ் மற்றும் துர்ஷாரா ஆகியோரின் அன்பு தாத்தா, காலஞ்சென்ற குணபாக்கியம், காலஞ்சென்ற நவரத்தினம், செல்வதிரவியம், காலஞ்சென்ற செல்லகண்டு மற்றும் மறைந்த செல்வராணி ஆகியோரின் அன்புச் சகோதரர். மறைந்த கணேஷ்பதி, மறைந்த இந்திராதேவி, மறைந்த சிவலிங்கம் மற்றும் சிவபாதசுந்தரம், ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 5.11.2022 சனிக்கிழமை அன்னாரது 78/3, W.A.Silva Mawatha வெள்ளவத்தை இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு 6.11.2022 ஞாயிற்றுக்கிழமை 8.00 மணியளவில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று 12 மணிக்கு கல்கிசை பொது மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்,

தகவல் : மகன் அஜந்தன் : 0777 783835, 076 9875231

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## காணாமல் ஆக்கப்படும் உண்மைகள்

**போ**ரின் இறுதிக் கட்டத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்த எவரும் இராணுவத்தினரிடம் சரணடையவில்லை என்று தகவல் அறியும் ஆணைக்குழு முன்பாக இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர். இலங்கை அரசாங்கம் இந்த விடயத்தில் அண்மைக்காலமாக பெரும் தடுமாற்றத்துக்குள்ளாகியுள்ளது. காணாமல் ஆக்கப்பட்டோர் விடயத்துடன் இந்தச் சரணடைதலும் நேரடியாகத் தொடர்புபடுகின்றது. இதனால் அரசாங்கத்தின் நிறுவனங்கள் இந்த விடயத்தில் புதியதொரு போக்கை கையாளத் தொடங்கியுள்ளமை தெளிவாகத் தெரியவருகின்றது.

காணாமற்போனோர் தொடர்பான பணியகத்தின் தலைவர் மகேஸ் கட்டுலந்த, ரொய்ட்டர்ஸ் செய்தி நிறுவனத்துக்கு அண்மையில் வழங்கிய நேர்காணலில், ‘போரின் இறுதிக் கட்டத்தில் இராணுவத்தினரிடம் எவரும் சரணடையவில்லை’ என்றும் அதற்கான ஆதாரங்கள் எவையும் இல்லை என்று கூறியிருந்தார். இது தொடர்பில் காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழு விசாரணை மற்றும் நீதிமன்ற விசாரணைகளில் வெளிப்படுத்தப்பட்ட விடயங்களையும் உதயனின் ஆசிரியர் தலையங்கத்தில் கடந்த வாரம் குறிப்பிட்டிருந்தோம். இலங்கை அரசாங்கம் இந்த விடயத்தில் இப்போது முழுப் பூசணிக்காயை சோற்றில் மறைக்கின்ற வேலையை தொடர்ந்து செய்யத்தொடங்கியுள்ளது.

போரின் இறுதிக் கட்டத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் இராணுவத்தினரிடம் சரணடைந்தார்கள் என்பது பரகசியம். ஆதற்கான ஆதாரமாக ஒளிப்படங்கள் பலவும் இருக்கின்றன. சவேந்திர சில்வா கட்டளைத்தளபதியாக இருந்த 58 ஆவது படைப் பிரிவிடமே அதிகளவிலான விடுதலைப் புலிகள் சரணடைந்திருந்தார்கள். அவ்வாறு சரணடைந்தவர்கள் சுட்டுக்கொல்லப்பட்ட காணொலிகளை ‘சனல் – 4’ ஊடகம் வெளியிட்டும் இருந்தது. வெள்ளைக்கொடியுடன் சரணடைய வந்த விடுதலைப் புலிகளின் முக்கியமான தளபதிகளையும் இராணுவம் சுட்டுக்கொன்றிருந்தது. இது தொடர்பில் இறுதிப்போர் நடந்தபோது இராணுவத்தளபதியாக இருந்த பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா ‘வெள்ளைக்கொடியோடு வந்தவர்களை சவேந்திர சில்வாவின் படைப் பிரிவு, கோத்தாபயவின் உத்தரவுப்படி சுட்டுக்கொன்றது’ என ஆங்கில ஊடகமொன்றுக்குத் தெரிவித்திருந்தார். இது சர்வதேச ரீதியில் பெரும் சர்ச்சையையும் ஏற்படுத்தியிருந்தது. கடைசியில் அது வழக்குவரை சென்றது.

இவ்வாறானதொரு நிலையில்தான், விடுதலைப் புலிகள் அமைப்பின் இரண்டாம் கட்டத் தலைவர்கள் போரின் இறுதிக் கட்டத்தில் இராணுவத்தினரிடம் கையளிக்கப்பட்டு – ஒருவகையில் சரணடைந்து – இருந்தார்கள். பின்னர் அவர்கள் காணாமல் ஆக்கப்பட்டனர். அவர்கள் எங்கே ? என்று போராளிகளைக் கையளித்த உறவினர்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம் சர்வதேச ரீதியில் இலங்கைக்கு எப்போதும் குடைச்சல் கொடுப்பதாகவே உள்ளது. ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் இந்த விவகாரமும் முக்கியமான இடத்தைப் பெற்றிருந்தது. காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம் உள்ளிட்ட போரின்போது நிகழ்ந்தவற்றை உள்நாட்டுப் பொறிமுறை ஊடாக விசாரிக்கப் போவதாக ஐ.நா. மன்றத்தில் இலங்கை உறுதியளித்துள்ளது. இதனையடுத்தே இலங்கை அரசாங்கம் காணாமல் ஆக்கப்பட்டோர் விடயத்தில் திடீரெனசதிராடத் தொடங்கியுள்ளது. ‘போரின் இறுதியில் இராணுவத்தினரிடம் எவருமே கையளிக்கப்படவோ, சரணடையவோ இல்லை. அவர்கள் காணாமல் ஆக்கப்படவில்லை’ என்ற காணாமற்போனோர் தொடர்பான பணியகத்தின் தலைவர் மகேஸ் கட்டுலந்தவின் கருத்து, ‘இராணுவத்தினரிடம் புலிகள் எவருமே சரணடையவில்லை’ என்ற இராணுவத்தினரின் கருத்து, ‘காணாமல் ஆக்கப்பட்டவர்கள் உயிருடன் இல்லை’ என்ற நீதி அமைச்சரின் கருத்து எல்லாவற்றையும் ஒரே நேர்கோட்டிலேயே நோக்கவேண்டும். இவை எல்லாவற்றுக்கும் மேலாக தற்போது ஜனாதிபதியாகவுள்ள ரணில் விக்கிரமசிங்க, நல்லாட்சி அரசின் காலத்தில் பிரதமராக இருந்தபோது யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற தேசிய தைப்பொங்கல் விழாவில், காணாமல் ஆக்கப்பட்டவர்கள் எவரும் உயிருடன் இல்லை என்று கூறியவர்தான்.

எனவே, காணாமல் ஆக்கப்பட்டோர் உயிருடன் இல்லை, சரணடைவுகள் இடம்பெறவில்லை என்ற முடிவுகளை இலங்கைப் பேரினவாத அரசாங்கம் தெட்டத் தெளிவாக எடுத்துள்ளது. இதனால் எழப்போகும் பெரும் அதிர்வலைகளைத் தணிப்பதற்காக, அரசாங்கத்தின் ஒவ்வொரு தரப்பும் ஒவ்வொரு காலத்தில் ஒரே விடயத்தை வெவ்வேறு வடிவத்தில் கசியவிடுகின்றன.

காணாமல் ஆக்கப்பட்டவர்கள் உயிருடன் இல்லை என்றால் அவர்கள் எப்படி உயிரிழந்தார்கள்? அவர்களுக்கு என்ன நடந்தது? அதேபோல சரணடைவுகள் நடக்கவேயில்லை என்றால் அத்தனை ஆயிரம் மக்களும் பொய் சொல்கின்றார்களா? அல்லது சரணடைந்ததாகச் சொல்லப்பட்டவர்கள் எங்கே? சனல்–4 இல் காட்டப்பட்ட காணொலி மூலம் வெளிகொண்டுவரப்பட்ட உண்மைகளின் கதி என்ன? இந்தக் கேள்விகளுக்கான உண்மையான பதில்கள் தெரியாதவரையில், எத்தகைய கூத்துக்கள் ஆடினாலும் காணாமல் ஆக்கப்பட்டோரைத் தேடும் உறவுகளின் போராட்டத்தை முடிவுக்கு கொண்டு வரமுடியாது.




### வடமாகாண மரநடுகை மாதம்

நவம்பர் 2022

“ஒரு மனிதன் தனக்காக இல்லாவிட்டாலும் தனது எதிர் காலச் சந்ததியினருக்காக மரங்களை நடவேண்டும்”
—அலெக்சான்டர் சிமித் (ஸ்கொட்லாந்துக் கவிஞர்)





# நாட்டில் 5.7 மில். மக்களுக்கு மனிதாபிமான உதவி தேவை

*செம்பிறை சமூகங்களின் சர்வதேச சம்மேளனம் அறிக்கை*

**கொழும்பு, நவ. 5**

**இலங்கையின் 5.7 மில்லியன் மக்களுக்கு மனிதாபிமான உதவி தேவைப்படுகிறது என செம்பிறை சமூகங்களின் சர்வதேச சம்மேளனம் தெரிவித்துள்ளது.**

அந்த அலுவலகம் நேற்றுமுன்தினம் வெளியிட்ட புதிய அறிக்கையில் இதனைக் குறிப்பிட்டுள்ளது.

அதில் மேலும் உள்ளதாவது:-

5.7 மில்லியன் மக்கள் என்பது நாட்டின் சனத்தொகையில் 26 வீதத்துக்கு சமம். உடனடி மனிதாபிமான உதவிகள், அமைப்புக் கள் மற்றும் சேவைகளின் பலவீனத்தை நிவர்த்தி செய்வதற்கான தலையீடுகள் இல்லாத பட்சத்தில் மனிதாபிமான உதவிகள் தேவைப்படுபவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும்.

இலங்கையில் பொருளாதார நெருக்கடி காரணமாக உணவுப் பாதுகாப்பு மற்றும் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது. கல்வி மீதான தாக்கத்துக்கு அப்பால் சிறுவர்களது மீதான ஆபத்துக்கள் அதிகரித்துள்ளன. உள்நாட்டு விவசாய உற்பத்தி வீழ்ச்சி நெருக்கடியை மேலும் தீவிரமானதாக மாற்றியுள்ளது.

ஒவ்வோர் குடும்பங்களில் உள்ளோரும் நெருக்கடிகளில் இருந்து தப்பிப்பதற்காக உணவைக் குறைத்தல் மருத்துவர்களை நாடுவதை தாமதித்தல், பாடசாலைகளில் இருந்து மாணவர்களை நிறுத்தி தொழிலுக்கு அனுப்புதல், தங்கள் சொத்துக்களை விற்றல் போன்ற அவலகரமான செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர் என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ச-இ)

# ஐ.எம்.எப். கடன் உதவிகள் டிசெம்பரில் சாத்தியமில்லை

*சீனாவின் இழுத்தடிப்பால் இலங்கைக்கு நெருக்கடி*

கொழும்பு, நவ.5

சர்வதேச நாணய நிதியத்தின் கடனுதவியை இலங்கை டிசெம்பர் மாதம் எதிர்பார்த்துள்ள போதும், அது சாத்தியமில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

முக்கியமான இரு தரப்புக் கடனாளியான சீனா 20ஆவது கட்சி மாநாட்டில் ஈடுபட்டமை காரணமாக கொழும்புடன் கடன் மறுசீரமைப்புப் பேச்சை நடத்துவதில் ஏற்பட்ட காலதாமதமும் இதற்குக் காரணம் என்று இந்திய செய்தி நிறுவனமான “தி ஹிந்துஸ்தான்” தெரிவித்துள்ளது.

கடன் வழங்குநர்களான இந்தியாவும், ஜப்பானும் ஏற்கனவே கொழும்புடன் கடன் நல்லிணக்கம் மற்றும் மறுசீரமைப்புப் பேச்சை ஆரம்பித்துள்ளன. ஆயினும் சீனா இன்னமும் பேச்சில் ஈடுபடவில்லை. அதனால் சர்வதேச நாணய நிதியத்தின் 2.9 மில்லியன் அமெரிக்க டொலரை எட்டு சம தவணைகளில் பெறுவதற்கு எதிர்வரும் மார்ச் மாதம் வரையில் இலங்கை காத்திருக்க வேண்டியிருக்கும் என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-இ)

**நாளை**
**06.11.2022**
**ஞாயிற்றுக்கிழமை**
**ஐப்பசி 20**
சுபநேரம் : 09.05 - 10.35
ராகுகாலம்: 04.35 - 06.05

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3ம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 06 08 1939



மறைவு 05 11 2019

அமரர் பண்டிதை
செல்வி தில்லை நாயகி இராஜரட்ணம்
ஓய்வு பெற்ற ஆசிரியர் - மானிப்பாய் மகளிர் கல்லூரி
வண்ணார் பண்ணை வட மேற்கு ஆனைக்கோட்டை

எம்மைப் பிரிந்து ஆண்டுகள் மூன்று ஆகிவிட்டாலும்.
நேற்றே போல் உள்ளதே!
உங்கள் உள்ளமோ களங்கமற்ற பளிங்கு கண்ணாடி
உங்கள் வார்த்தை எவரையும் களிப்பூட்டும் களஞ்சியம்
உங்களை அண்டி வருவோருக்கு ஆறுதல் கூறும் அமைதி மன்றம்
எவ்வுயிரும் தன்னுயிர் எனப் போற்றும் எண்ணக்கோயில்
தனக்கென வாழ்ந்திடாத உயர்ந்த உத்தமியே !
சைவமும் தமிழும் இரு கண்களாக வாழ்ந்த சகோதரியே !
எங்கள் எல்லோரையும் மீளாத்துயரில் ஆழ்த்தி விட்டு சென்று விட்டீர்கள்.

**எனினும் உங்கள் ஆத்மா சாந்தியடைய வேண்டும்.என இறைவனை வேண்டுகிறோம்.**

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கும்
அன்பு சகோதரர்கள்

# நாட்டை அழிப்போர் விலகும் வரை மக்கள் போராட்டம் தளர்வடையாது

## சரத் பொன்சேகா தெரிவிப்பு

**கொழும்பு, நவ. 5**

**நாட்டை பொருளாதார நெருக்கடிக்குள் தள்ளி மக்களை சொல்லொணாத் துயரங்களுக்குள் தள்ளிய அரசதலைவர்கள் உட்பட அரசியல்வாதிகள் அனைவரும் அரசியலிலிருந்து முழுமையாக விலகும் வரை மக்கள் போராட்டம் தொடரும் - இவ்வாறு கடந்த புதன்கிழமை அரசாங்கத்துக்கு எதிராக இடம்பெற்ற போராட்டத்தை களனியில் ஆரம்பித்து வைத்தபின் ஊடகங்களுக்கு கருத்துரைக்கையில் நாடாளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், நாட்டை வங்குரோத்தடையச் செய்தோர், செய்துகொண்டிருப்போர் அரசியலிலிருந்து முழுமையாக விலக வேண்டும். அதுவரை மக்கள் போராட்டம் தொடரும்.

யார் தேசத்துரோகி, யார் தேசாபிமானி என்பதை நாட்டு மக்கள் நன்கு அறிவார்கள்.

போரின்போது ஒரு கட்டத்தில் போராட்டம் தீவிரமடையும் ஒரு கட்டத்தில் போராட்டம் தளர்வடையும் அதற்காகப் போராட்டம் முடிவடைந்துவிட்டது எனக் குறிப்பிட முடியாது. அதுபோலதான் தற்போதும் மக்கள் போராட்டம் காணப்படுகிறது. போராட்டத்தில் ஈடுபடும் உரிமை நாட்டு மக்களுக்கு உண்டு. ஜனநாயகத்தை முன்னிலைப்படுத்தி அரசாங்கம் செயற்படுமாயின் மக்களின் அபிலாஷைக்கு மதிப்பளித்து தேர்தலை நடத்த வேண்டும் -என்றார். (ச-இ)

# INVITATION FOR BID (IFB 2022)
## Jaffna Municipal Council
## கேள்வி அறிவித்தல்
### யாழ்ப்பாணம் மாநகர சபை - சபை நிதி (CF) 2022

01. யாழ்ப்பாணம் மாநகரசபையின் பிராந்திய பெறுகைகள் குழுத்தலைவரால் தற்போது தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைகளுக்காகக் கோரப்படுகின்றன.

02. கேள்வியானது தேசிய போட்டி விலைக் கேள்வியின் மூலம் நடத்தப்படும்.

03. ஒப்பந்தமானது நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA). கட்டட நிர்மாணத்திற்கு கீழ்க்குறிப்பிடப்படும் தரத்தினைக் கொண்டிருப்பதோடு .பொதுநிதி சுற்றறிக்கை. இல.04/2016(i)ற்கு அமைவாக இவ்விலைமனுக் கோரலானது தகுந்த வியாபார அல்லது கம்பனிப் பதிவுகளை வடமாகாணத்திற்குள் கொண்டுள்ளதும் கறுப்புப்பட்டியலில் (Black list) சேர்த்துக் கொள்ளப்படாததுமான கேள்விதாரரிற்கு வழங்கப்படுவதற்கு உரித்துடையதாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. தகுதியான கேள்விகள் கிடைக்காத பட்சத்தில் கீழ்க் குறித்த அட்டவணையில் உள்ள CIDA தரத்திற்கு மேற்பட்ட கேள்விதாரரின் கேள்விகள் கருத்திற் கொள்ளப்படும்.

04. தேவையான தகைமைகள். கேள்வி ஆவணம் பகுதி 4ல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) கேள்வி ஆவணம் பகுதி 5ல் காட்டப்பட்டுள்ளது.

05. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் முதல்வர்/ ஆணையாளர். மாநகர சபை. யாழ்ப்பாணம் (தொலைபேசி இல : 021 2216468. 021 2222019) என்னும் முகவரியிலிருந்து 05.11.2022 திகதியில் இருந்து 18.11.2022 ஆம் திகதி வரை அலுவலக நாட்களில் காலை 9.00 மணிக்கும் மாலை 2.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.3500.00 மற்றும் வரியினைச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். இத் தொகை. பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.

06. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து (மூலப்பிரதி மற்றும் பிரதி தனித்தனிஉறைகளில்) தலைவர். பிராந்தியப் பெறுகைகள் குழு. மாநகர சபை. யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு 21.11.2022 ஆம் திகதி மாலை 2.00 மணிக்கு முன்பதாகக் கிடைக்கக் கூடியவாறு பதிவுத்தபால் மூலமாகவோ அல்லது நேரடியாக அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டிக்குள் இடப்படல் வேண்டும். கேள்வியின் வெளியுறையின் இடதுபக்க மேல்மூலையில் வேலை விபரம் குறிப்பிடப்படல்வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர் அல்லது பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

07. கேள்விப் பிணைவைப்புத்தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

08. கேள்வி தொடர்பான முன்னோடிக் கேள்விச் சபைக்கூட்டம் திட்டமிடல் மாநாட்டு மண்டபம். மாநகர சபை. யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் 11.11.2022 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 11.30 மணிக்கு இடம்பெறும்.

09. கேள்விகளை ஏற்றுக்கொள்வதும் நிராகரிப்பதும் பெறுகைக் குழுவின் இறுதித் தீர்மானத்திற்கு அமைவானதாகும்.

| இல | ஒப்பந்த இல | வேலை விபரம் | மதிப்பீட்டுத் தொகை | ஒப்பந்த காலம் | வேண்டப் படும் தரம் | கேள்வி செல்லுபடியாகும் காலம் கேள்வி சமர்ப்பிக்கும் இறுதித் தினத்திருந்து | வேண்டப்படும் பிணை | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | பாதுகாப்பு பிணைத் தொகை | செல்லுபடி யாகும் காலம் |
| 1 | JMC/WD/ Kalviyankadu Market Shopping Complex St- 3/2022-16 | Construction of Kalviyankadu Market Shopping Complex - Stage 3 | 10.201 | 150 Days | C6&C5 (Building) | 77days | 102,500.00 | 06.03.2023 |
| 2 | JMC/WD/Hos.Road Drainage/ 2022 - 17 | Renovation of Hospital Road Inter lock paving & Drainage Work (Hospital Side Jaffna) | 21.859 | 90 days | C6&C5 (Building) | 77 days | 220,000.00 | 06.03.2023 |
| 3 | JMC/WD/ Retaining Wall Achchthan Kulam /2022-18 | Construction of Safety Retaining Wall at Achchuthankulam Connecting Channel | 1.785 | 60days | C8&C9 (High way) | 49 days | 18000.00 | 06.02.2023 |
| 4 | JMC/WD/CF/Package ix/2022-28 | 1. Improvement of Sabapathy Road 2. Improvement of Multi Purpose centre at Arukalmadam | 2.407 | 60 days | C8 & C7( High way & Building | 63 days | 25,000.00 | 20.02.2023 |

தலைவர்,
பிராந்தியப் பெறுகைகள் குழு,
மாநகர சபை, யாழ்ப்பாணம்

05.11.2022 (CR 38444) (3/6)

# மரக்கறிகளின் விலை மீண்டும் அதிகரிப்பு



வழமையை விட தற்போது மரக்கறிகளின் விலை அதிகரித்துள்ளது என்று நுகர்வோர் தெரிவித்துள்ளனர்.

நாரஹேன்பிட்டி பொருளாதார நிலையத்தில் கரட் கிலோ ரூ.420, பீன்ஸ் கிலோ ரூ.520, முட்டைக்கோஸ் ரூ.360, கத்தரிக்காய் கிலோ ரூ.400, பூசணி கிலோ ரூ.280, பச்சை மிளகாய் கிலோ ரூ.400, எலுமிச்சம்பழம் கிலோ ரூ.800, தக்காளி கிலோ ரூ.440 என்ற விலையில் விற்பனை செய்யப்படுகின்றது.

இருப்பினும் மற்றைய சந்தைகளை பேலியகொட மெனிங் சந்தையில் நுகர்வோருக்கு ஏற்ற வகையில் மரக்கறிகள் விற்பனை செய்யப்படுகின்றன.

**பொதுச்சந்தையில் ஒருகிலோ பெரிய வெங்காயம் 280 முதல் 300 ரூபா வரையில் விற்பனை செய்யப்படும் நிலையில், பேலியகொட மெனிங் சந்தையில் ஒருகிலோ பெரிய வெங்காயம் 250 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டது. அத்துடன் பேலியகொட மெனிங் சந்தையில் ஒரு கிலோ உள்ளூர் உருளைக்கிழங்கு 330 ரூபாவாக விற்பனை செய்யப்படுகின்ற நிலையில் நாரஹேன்பிட்டி பொருளாதார நிலையத்தில் 480 ரூபாவாக விற்பனை செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.**

(ஒ-14-இ)

## பெயர் மாற்றம்

வெளிச்ச வீட்டு ஒழுங்கை. பருத்தித்துறை எனும் முகவரியில் வசிக்கும் **வஸ்ரியாம்பிள்ளை வின்சன் சேவியர் ரஞ்சிதராஜன்** என்ற எனது பெயரினை **வஸ்ரியாம்பிள்ளை வின்சன் சேவியர்** என பெயர் மாற்றம் செய்வதோடு இன்று முதல் சகல ஆவணங்களிலும் அவ்வாறே கையொப்பமிடுவேன் என இலங்கை சோசலிச குடியரசுக்கு அமைவாக அறியத்தருகின்றேன்.

**வ. வின்சன் சேவியர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலைக்கு ஆள்கள்தேவை

உயர்தர சைவ உணவகம் ஒன்றிற்கு கீழ்க்காணும் வேலைக்கு வேலையாள்கள் தேவை.

1. **றொட்டி சோட்டீஸ், தோசை தயாரிப்பாளர்**
2. **பகல், இரவு உணவு தயாரிப்பாளர்**
3. **சப்பிளையர் (உணவு பரிமாறுபவர்)**

குறிப்பு : தங்கி நின்று வேலை செய்பவர்கள் விரும்பத்தக்கது.

(CS 21614) (3/6)

**452, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**
**021 221 6779**



## பெயர் மாற்றம்

கடையிற் சுவாமி லேன், யாழ்ப்பாணத்தில் வசிக்கும்
**கந்தையா வயித்திலிங்கம்**
ஆகிய நான் எனது பெயரை **கந்தையா வீரசிங்கம்** என மாற்றம் செய்வதோடு, இனிவரும் சகல ஆவணங்களிலும் **கந்தையா வீரசிங்கம்** என்றே கையொப்பம் இடுவேன் என இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியசுக்கு அமைவாக மக்களுக்கு அறியத்தருகின்றேன்.

(cs21610) (2.6)

**கந்தையா வீரசிங்கம்**



## சிங்கள வகுப்பு

**உத்தியோகத்தர்களுக்கான**
O/L சிங்கள் வகுப்புக்களும்
**ஏனையவர்களுக்கான**
சிங்கள வகுப்புக்களும்
**வல்வெட்டித்துறையில் ஆரம்பம்**
தொடர்பு: **077 711 5876**

(ni21504) (2.6)


# பூநகரிப்பிரதேச சபை
# பொதுச் சந்தைகள், கருவாட்டுக் கடைகள், இறைச்சிக் கடைகள் குத்தகைக்கு வழங்குவதற்கான
# கேள்வி அறிவித்தல் - 2023

கடைகள், இறைச்சிக்கடைகள் என்பன 2023 ம் ஆண்டிற்காக 01.01.2023 தொடக்கம் 31.12.2023 வரையான காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்கு கேள்விகள் பொருத்தமான நபர்களிடமிருந்து கோரப்படுகின்றன.

- **கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி : 08.11.2022 தொடக்கம் 21.11.2022 வரை**
  **காலம் மு.ப.8.30 -பி.ப 3.30 வரை**
- **கேள்வி ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி : 21.11.2022 மதியம் 12.00 மணி வரை**
- **கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும் திகதி : 21.11.2022 பி.ப 12.30 மணி**

### கேள்வி நிபந்தனைகள் :

01. கேள்விப்பத்திரங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை தவிசாளர் பிரதேசசபை. பூநகரி எனும் முகவரிக்கு அரக்கு முத்திரை இட்டு தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக எழுதப்பட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும் அல்லது அதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள பெட்டியில் இடுதல் வேண்டும். இரண்டாவது பிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம். கிளிநொச்சி எனும் முகவரிக்கு21.11.2022 ஆம் திகதி மதியம் 12.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ அனுப்பி வைத்தல் வேண்டும்.
02. கேள்விப்பத்திரங்களினை பெற விரும்புபவர்கள் பிரதேச கிராம சேவையாளரின் வதிவிடச்சான்றிதழ் மற்றும் கிராம சேவையாளரினால் தேசிய அடையாள அட்டையினை உறுதிப்படுத்தி சமர்ப்பித்தல் வேண்டும்.
03. கேள்விப்பத்திரங்கள் பெற விரும்புபவர்கள் மீளளிக்கப்படாத படிவக்கட்டணம் மற்றும் மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணத்தினையும் செலுத்த வேண்டும்.
04. உள்ளூராட்சி மன்றங்களினால் தவறுநராக கணிக்கப்பட்ட எவரிற்கும் படிவம் வழங்கப்பட மாட்டாது.
05. கேள்விகள் திறந்து பரிசீலிக்கும் நாளன்று கேள்வியாளரோ அல்லது அவரின் பிரதிநிதியோ சமூகமளிக்கலாம்.
06. கேள்வி நிபந்தனைகள் அறிவுறுத்தலிற்கு அமையாத கேள்விக்கோரிக்கைகளினை நிராகரிக்கின்ற அதிகாரம் கேள்விச்சபைத் தலைவரிற்கு உண்டு.
07. தெரிவு செய்யப்படும் கேள்விதாரர் கேள்வித்தொகையின் மூன்றில் ஒரு பங்கினை 25.11.2022 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தி சபையோடு ஒப்பந்தம் ஒன்றினை செய்து கொள்ள வேண்டும்.
08. பெறுகைக்குழு கேள்வியை ஏற்றுக்கொள்வதுஅல்லது பகுதியாக ஏற்றுக்கொள்வது அல்லது நிராகரிப்பது பெறுகைக்குழுவின் அதிகாரத்திற்குட்பட்டது ஆகும். கேள்விக்குட்படுத்தலாகாது.

## 2023ஆம் ஆண்டுக்கான பொதுச் சந்தைகள் , கருவாட்டுக் கடைகள், இறைச்சிக்கடைகளிற்கான கேள்வி கோரல்

| தொ. இல | விடயம் | மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணம் | மீளளிக்கப் படும் கேள்விக் கட்டணம் | ஏற்றுக் கொள்ளப்படும் ஆகக்குறைந்த கேள்வித் தொகை |
|---|---|---|---|---|
| | **பொதுச்சந்தைகள்** | | | |
| **பூநகரி உப அலுவலகம்** | | | | |
| 1 | வாடியடி | 500.00 | 5000.00 | 38500.00 |
| 2 | முட்கொம்பன் | 500.00 | 3000.00 | 24792.90 |
| **பல்லவராயன்கட்டு உப அலுவலகம்** | | | | |
| 1 | ஜெயபுரம் | 500.00 | 5000.00 | 66000.00 |
| 2 | கிராஞ்சி | 500.00 | 3000.00 | 44000.00 |
| 3 | வலைப்பாடு | 500.00 | 3000.00 | 16500.00 |
| 4 | 19 ம் கட்டை | 500.00 | 3000.00 | 38500.00 |
| **இரணை தீவு உப அலுவலகம்** | | | | |
| 1 | நாச்சிக்குடா கடற்கரை | 500.00 | 3000.00 | 16500.00 |
| 2 | முழங்காவில்பொதுச்சந்தை | 1000.00 | 8500.00 | 510968.48 |
| | **மாட்டிறைச்சிக்கடைகள்** | | | |
| **பூநகரி உப அலுவலகம்** | | | | |
| 1 | வாடியடி | 1000.00 | 8000.00 | 49610.00 |
| 2 | பள்ளிக்குடா | 1000.00 | 8500.00 | 399905.00 |
| **பல்லவராயன்கட்டு உப அலுவலகம்** | | | | |
| 1 | ஜெயபுரம் | 1000.00 | 8000.00 | 30250.00 |
| 2 | கிராஞ்சி | 1000.00 | 3000.00 | 60500.00 |
| 3 | 19 ம் கட்டை | 1000.00 | 5000.00 | 606210.00 |
| 4 | வலைப்பாடு | 1000.00 | 5000.00 | 145200.00 |
| | **இரணை தீவு உப அலுவலகம்** | | | |
| 1 | நாச்சிக்குடா கடற்கரை | 1000.00 | 10500.00 | 1045825.00 |
| 2 | முழங்காவில் பொதுச்சந்தை | 1000.00 | 10500.00 | 1059958.76 |
| | **கோழியிறைச்சிக்கடைகள்** | | | |
| **பூநகரி உப அலுவலகம்** | | | | |
| 1 | வாடியடி | 500.00 | 3000.00 | 152570.00 |
| 2 | பள்ளிக்குடா | 1000.00 | 3000.00 | 31460.00 |
| **பல்லவராயன்கட்டு உப அலுவலகம்** | | | | |
| 1 | ஜெயபுரம் | 500.00 | 3000.00 | 11000.00 |
| 2 | கிராஞ்சி | 500.00 | 3000.00 | 5610.00 |
| 3 | வலைப்பாடு | 500.00 | 3000.00 | 15730.00 |
| **இரணை தீவு உப அலுவலகம்** | | | | |
| 1 | முழங்காவில் பொதுச்சந்தை | 500.00 | 3000.00 | 624360.00 |
| | **ஆட்டிறைச்சிக்கடை** | | | |
| **பூநகரி உப அலுவலகம்** | | | | |
| 1 | வாடியடி | 500.00 | 3000.00 | 5500.00 |
| 2 | பள்ளிக்குடா | 500.00 | 3000.00 | 5500.00 |
| **பல்லவராயன்கட்டு உப அலுவலகம்** | | | | |
| 1 | கிராஞ்சி | 500.00 | 3000.00 | 5500.00 |
| 2 | ஜெயபுரம் | 500.00 | 3000.00 | 5500.00 |
| **இரணை தீவு உப அலுவலகம்** | | | | |
| 1 | முழங்காவில் பொதுச்சந்தை | 500.00 | 3000.00 | 4950.00 |
| | **கருவாட்டுக்கடை** | | | |
| **பூநகரி உப அலுவலகம்** | | | | |
| 1 | வாடியடி | 500.00 | 3000.00 | 11000.00 |
| 2 | பள்ளிக்குடா | 500.00 | 3000.00 | 11000.00 |
| **பல்லவராயன்கட்டு உப அலுவலகம்** | | | | |
| 1 | கிராஞ்சி | 500.00 | 3000.00 | 11000.00 |
| **இரணை தீவு உப அலுவலகம்** | | | | |
| 1 | நாச்சிக்குடா சந்தி இல - 01 | 500.00 | 3000.00 | 12100.00 |
| 2 | நாச்சிக்குடா சந்திஇல - 02 | 500.00 | 3000.00 | 12100.00 |
| **தரிப்பிடம்** | | | | |
| 1 | வாடியடி வாகன தரிப்பிடம் | 500.00 | 3000.00 | 40000.00 |
| 2 | முழங்காவில் வாகன தரிப்பிடம் | 500.00 | 3000.00 | 40000.00 |
| 3 | சங்குப்பிட்டி பொழுதுபோக்கு மையம் | 500.00 | 2000.00 | 20000.00 |
| **மலசலகூடம்** | | | | |
| 1 | முழங்காவில் | 500.00 | 1000.00 | 10000.00 |

(CR 38440) (5.6)

**தவிசாளர்**
**சிவகுமாரன் ஸ்ரீறஞ்சன்**
**பூநகரி பிரதேச சபை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேள்விஅறிவித்தல் - 2023
## வலிகாமம் தென்மேற்குபிரதேச சபை, மானிப்பாய்

வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபையின் அதிகார எல்லைக்குட்பட்ட. கீழ்க்குறிப்பிடப்படும் பொதுச்சந்தைகள். துவிச்சக்கரவண்டிப் பாதுகாப்பு நிலையம். பொதுமலசலகூடம் மற்றும் இறைச்சிக்கடைகள். கருவாட்டுக்கடை. சிறுவர் பூங்கா சிற்றுண்டிச்சாலை என்பவற்றை 2023.01.01 ஆம் திகதி தொடக்கம் 2023.12.31 ஆம் திகதிவரையான காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

**கேள்விப்பத்திரம் வழங்கும் இறுதித் திகதி : 21.11.2022 பி.ப 2.00 மணிவரை**

**கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி : 22.11.2022 பி.ப 2.00 மணிவரை**

**கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதி : 22.11.2022 பி.ப 2.30 மணி**

**கேள்விப்பத்திரம் திறக்கப்படும் இடம் : வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, தலைமைஅலுவலகம்**

01. கேள்விப்பத்திரங்கள் 02 பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதி உட்பட 02 பிரதிகளையும் "தவிசாளர்.வலிகாமம் தென்மேற்குபிரதேச சபை மானிப்பாய்" என்ற முகவரிக்கு அரக்குமுத்திரையிட்டு தபால் உறையின் இடது பக்கமேல்மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும் அல்லது அதற்கெனத் தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரியநேரத்திற்குமுன் போடப்படுதல் வேண்டும்

02. கேள்விப்பத்திரம் பெறவிரும்புவோர் விண்ணப்பங்களுடன் தேசியஅடையாளஅட்டையையும் அதன் நிழற்படப்பிரதியையும் கொண்டு வருவதுடன் கிராமஅலுவரால் வழங்கப்பட்ட வதிவிடச் சான்றிதழையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

03. உள்ளூராட்சிமன்றங்களால் தவறுநராகக் கணிக்கப்பட்டஎவருக்கும் கேள்விப்பத்திரம் வழங்கப்படமாட்டாது. படிவம் வழங்கப்பட்டபின் கண்டுபிடிக்கப்பட்டால் அவரின் கேள்விப்பத்திரம் நிராகரிக்கப்படுவதுடன் கேள்வி வைப்புப்பணமும் மீளளிக்கப்படமாட்டாது.

04. ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக் குறைந்தகேள்வித் தொகையிலும் குறைந்த கேள்வி கோருபவர்களின் கேள்வி நிராகரிக்கப்படுவதுடன் கேள்வி வைப்புப் பணமும் மீளளிக்கப்படமாட்டாது.

05. உரியகாலத்தில் சமர்ப்பிக்கப்படாத கேள்விகள் இரத்துச் செய்யப்படும்.

06. கேள்விநிபந்தனைகள். அறிவுறுத்தலுக்குஅமையாத கேள்விக் கோரிக்கைகளை நிராகரிக்கவும் எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச்சபைக்கு பூரண அதிகாரம் உண்டு.

07. கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்வியாளரோஅல்லது அவரது பிரதிநிதியோ சமூகமளிக்கலாம்.

08. ஆனைக்கோட்டைச்சந்தி மாட்டிறைச்சிக்கடையை குத்தகைக்கு எடுப்பவர்கள் நடாத்துவதற்குரிய இடத்தினைத் தாங்களே தெரிவுசெய்தல் வேண்டும்.

09. மானிப்பாய் சிறுவர் பூங்காவில் சிற்றுண்டி விற்பனையில் ஈடுபடுவதற்கு ஒதுக்கப்பட்ட இடத்தில் சுகாதார விதிகளுக்கமைய தற்காலிக அமைப்பை குத்தகைதாரரே ஏற்படுத்த வேண்டும்.

10. மாதவாடகையானது விலைமதிப்பீட்டுத் திணைக்கள மதிப்பீட்டின் பிரகாரம் அறவிடப்படும்.

11. அரசாங்கத்தினால் காலத்திற்குகாலம் விதிக்கப்படும் வரியினை செலுத்துதல் வேண்டும்.

12. சித்தியடையும் கேள்விதாரர் கேள்வித் தொகையின் 1/3பகுதியை உரியகாலப்பகுதிக்கு முன்னர் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் ஒன்றினை செய்து கொள்ளவேண்டும்.

13. கேள்விப்பத்திரங்களை தலைமைஅலுவலகத்தில் பெற்றுக் கொள்வதுடன் கேள்வி சம்பந்தமான மேலதிக விபரங்களை தலைமை அலுவலகத்திலும் உப அலுவலகங்களிலும் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

14. நாட்டில் ஏற்படக் கூடிய அசாதாரண சூழ்நிலைகளைக் கருத்திற் கொண்டு இதில் மாற்றங்கள் ஏற்படுத்தப்படலாம்

15. குத்தகைதாரர் அறவிடுவதற்கு அனுமதிக்கப்பட்ட வாகனத்தரிப்பிட கட்டண விபரம். துவிச்சக்கரவண்டி ரூபா:-10/=. மோட்டார் சைக்கிள் . ரூபா:-20/=

| | பொதுச் சந்தைகள்.(துவிச்சக்கரவண்டிப் பாதுகாப்பு நிலையம்.பொதுமலசலகூடம்). இறைச்சிக்கடைகள் விபரம் | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரப் பணம் | மீளளிக்கப்படும் கேள்விவைப்புப் பணம் | ஏற்றுக் கொள்ளக்கூடிய ஆகக் குறைந்த தொகை | மாதாந்த வாடகை |
|---|---|---|---|---|---|
| **மானிப்பாய் பட்டின உப அலுவலகம்** | | | | | |
| 01 | மானிப்பாய் பொதுச் சந்தை(மீன் சந்தை.மரக்கறிச் சந்தை.துவிச்சக்கரவண்டிப் பாதுகாப்புநிலையம் மற்றும் பொதுமலசலகூடம் உள்ளடங்கலானது) | 1,000.00 | 27,000.00 | 2,719,750.00 | |
| 02 | மானிப்பாய் பொதுச் சந்தை கோழியிறைச்சிக்கடை (புதியகட்டிடத் தொகுதி) | 1,000.00 | 1,850.00 | 184,800.00 | 600.00 |
| 03 | மானிப்பாய் பொதுச் சந்தை மாட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 12,000.00 | 1,227,600.00 | 600.00 |
| 04 | மானிப்பாய் பொதுச் சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 1,000.00 | 72,600.00 | 600.00 |
| **மானிப்பாய் கிராம உப அலுவலகம்** | | | | | |
| 01 | காக்கைதீவுப் பொதுச் சந்தை (துவிச்சக்கரவண்டிப் பாதுகாப்புநிலையம் மற்றும் பொதுமலசலகூடம் உள்ளடங்கலானது) | 1,000.00 | 8,000.00 | 799,755.00 | |
| 02 | காக்கைதீவுப் பழையமீன் சந்தைக் கட்டிடம் . (கடலுணவுகள் களஞ்சியப்படுத்துவதற்குமாத்திரம்) | 500.00 | 2,000.00 | 19,030.00 | |
| 03 | நவாலி பிரசாத் சந்தை | 1,000.00 | 2,500.00 | 264,125.00 | |
| 04 | நவாலி பிரசாத் சந்தை கோழியிறைச்சிக்கடை | 500.00 | 1,000.00 | 22,000.00 | 300.00 |
| 05 | நவாலி பிரசாத் சந்தை மாட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 4,000.00 | 425,700.00 | 400.00 |
| 06 | சாவற்கட்டுச் சந்தை | 1,000.00 | 2,500.00 | 277,200.00 | |
| 07 | ஆனைக்கோட்டைச்சந்தி மாட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 2,000.00 | 224,070.00 | |
| 08 | மானிப்பாய் சிறுவர் பூங்கா சிற்றுண்டிச்சாலை(தற்காலிகமானது) | 1,000.00 | 1,500.00 | 157,080.00 | |
| **பண்டத்தரிப்புபட்டின உப அலுவலகம்** | | | | | |
| 01 | பண்டத்தரிப்புப் பொதுச் சந்தை | 1,000.00 | 27,000.00 | 2,701,050.00 | |
| 02 | பண்டத்தரிப்புப் பொதுச் சந்தை கோழியிறைச்சிக்கடை | 1,000.00 | 4,000.00 | 410,815 | 2,250.00 |
| 03 | பண்டத்தரிப்புச் சாந்தைச் சந்தை | 1,000.00 | 6,000.00 | 627,000.00 | |
| 04 | பண்டத்தரிப்பு பொதுச் சந்தை மாட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 16,000.00 | 1,602,470.00 | 2,250.00 |
| 05 | பண்டத்தரிப்பு சிறுவர் பூங்கா சிற்றுண்டிச்சாலை | 1,000.00 | 500.00 | 13,200.00 | |
| **பண்டத்தரிப்புகிராம உப அலுவலகம்** | | | | | |
| 01 | மாகியப்பிட்டிப் பொதுச் சந்தை | 1,000.00 | 2,000.00 | 247,500.00 | |
| 02 | மாகியப்பிட்டிப் பொதுச் சந்தை கோழியிறைச்சிக்கடை | 1,000.00 | 1,000.00 | 115,500.00 | 800.00 |
| 03 | இளவாலைப் பொதுச் சந்தை | 1,000.00 | 2,000.00 | 199,100.00 | |
| 04 | இளவாலைப் பொதுச் சந்தைகோழியிறைச்சிக்கடை | 1,000.00 | 1,000.00 | 72,290.00 | |
| 05 | மாதகல் பொதுச் சந்தை | 1,000.00 | 3,000.00 | 287,760.00 | |
| 06 | மாதகல் பொதுச் சந்தை கோழியிறைச்சிக்கடை | 500.00 | 1,000.00 | 28,690.00 | 750.00 |
| 07 | மாதகல் பொதுச்சந்தை மாட்டிறைச்சிக்கடை | 500.00 | 2,000.00 | 236,060.00 | 750.00 |
| 08 | இளவாலை மாட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 5,000.00 | 535,910.00 | |
| 09 | மாகியப்பிட்டி பொதுச்சந்தை மாட்டிறைச்சிக்கடை | 500.00 | 3,500.00 | 369,875.00 | 800.00 |

**அ.ஜெபநேசன்,**
**தவிசாளர்,**
**வலிகாமம் தென்மேற்குபிரதேச சபை, மானிப்பாய்**

**04.11.2022** (CR 7048) (3/6)

## 8 ஆம் திகதி சந்திரகிரகணம்

கொழும்பு, நவ. 5

எதிர்வரும் 8 ஆம் திகதி பகுதியளவான சந்திர கிரகணம் ஏற்படும் என்று கொழும்பு பல்கலைக்கழகத்தின் இயற்பியல் துறையின் வானியல் மற்றும் விண்வெளி விஞ்ஞானப் பிரிவின் பணிப்பாளர் பேராசிரியர் சந்தன ஜயரத்ன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது,

சந்திர கிரகணம் அவுஸ்திரேலியா, அமெரிக்கா மற்றும் ஐரோப்பாவின் சில பகுதிகளுக்கு முழு அளவாகத் தென்படும். இதற்கமைய, 8 ஆம் திகதி மாலை 5.48 மணிக்கு சந்திரன் உதயமாகும் என்பதுடன், சந்திர கிரகணத்தின் இறுதிப் பகுதியை இலங்கையில் காண முடியும். மாலை 6.19 மணிக்கு பகுதியளவான சந்திர கிரகணம் நிறைவடையும். எதிர்வரும் 2025 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 14 ஆம் திகதி மீண்டும் முழு அளவிலான சந்திர கிரகணத்தை பார்வையிட முடியும் - என்றுள்ளது.

(ஒ-14-இ)

## வாகனம் மோதியதில் முதியவர் காயம்

யாழ்ப்பாணம், நவ 5

சைக்கிளில் சென்ற முதியவர் ஒருவரை வாகனம் மோதியதில் காயமடைந்த நிலையில் அவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றுக் காலை சரசாலையில் இடம் பெற்றுள்ளது.

சரசாலை மத்தியைச் சேர்ந்த கணபதி கனகரத்தினம் (வயது-64) என்பவரே காயமடைந்தவராவார்.

(ச-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



மண்ணில் 08.12.1930

விண்ணில் 01.11.2022

## திருமதி செல்லத்துரை கதிராசிப்பிள்ளை (செல்லம்)

யாழ். பலாலியைப் பிறப்பிடமாகவும் வசாவிளானை நிரந்தர வதிவிடமாகவும் ஆவரங்காலை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட திருமதி செல்லத்துரை கதிராசிப்பிள்ளை (செல்லம்) கடந்த (01.11.2022) செவ்வாய்க்கிழமை அன்று இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை - குட்டிப்பிள்ளை தம்பதியினரின் கனிஷ்ட புத்திரியும், காலஞ்சென்ற அம்பலம் - சின்னாச்சிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற அம்பலம் செல்லத்துரை அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை தெய்வானைப்பிள்ளை, காசித்தம்பி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற சக்திவேல் (சிறி) மற்றும் யோகராஜா (சின்னண்ணை), திருமதி யோகராணி - இராஜகோபால், செல்வச்சந்திரன் (ராசன்), இராஜயோகன் (யோகன் - டென்மார்க்), தவராஜா (தவம் - சுவிஸ்), திருமதி தவராணி சொரூபலிங்கம் (கிளி), சாந்தகுமார் (சாந்தன் - லண்டன்), சிவனேஸ்வரவேல் (சிவா / குட்டி - சுவிஸ்), திருமதி செல்வராணி மோகானந்தம் (யமுனா - நெதர்லாந்து), செல்வக்குமார் (செல்வா / குட்டி - நெதர்லாந்து) ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (06.11.2022) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு அன்னாரின் ஆவரங்கால் (சிவன் கோவிலடி - கலையகம்) இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

"கலையகம்"
சிவன்கோவிலடி
ஆவரங்கால் (CS 21494 ) (3/6)

தகவல் :
குடும்பத்தினர்
077 650 5027, 077 348 0296

# மரண அறிவித்தல்

தோற்றம் 20 . 08 . 1929



மறைவு 02 . 11 . 2022

## திருமதி சரஸ்வதி வயித்திலிங்கம்

தெல்லிப்பளை கொல்லங்கலட்டியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சரஸ்வதி வயித்திலிங்கம் அவர்கள் கடந்த (02.11.2022) அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற முருகேசு சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற வன்னித்தம்பி தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற வயித்திலிங்கத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற துரைசிங்கம் மற்றும் தனபாலசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், நாகம்மா காலஞ்சென்ற ஞானேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனியும், காலஞ்சென்ற தேவசேனா, கெங்காதேவி (முன்னாள் இலங்கை வங்கி அலுவலர்), மற்றும் பாலச்சந்திரன் (கொழும்பு), சாவித்திரிதேவி (ஓய்வு பெற்ற கமநல சேவை உத்தியோகத்தர்), பிறேமா தேவி (U.K), பானுமதி (பிரதேச செயலகம், காரைநகர்), குமரன் (U.K) ஆகியோரின் அன்புத் தாயாரும், ஸ்ரீபாலச்சந்திரன், காலஞ்சென்ற நடேசன் மற்றும் ரோகிணி, குகனேசன், ராயூ, இரவீந்திரன், லகுமதி ஆகியோரின் அன்பு மாமியாரும், றோகன், அருணன், உதயசேகர், உதயகுமார், சஜித்குமார், சஞ்சயன், சரண்யன், சிந்துஜெயந்தி, வைஷ்ணவி, கார்த்திகாயினி, கிருத்திகாயினி, நர்மிகா, யாழினி, கிருசாந்தி, மயூரதி, சிவகாமி, காலஞ்சென்ற வேலவன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், தார்மிகன், சகானா, மிகுனன், ஜினோஸ், பார்வின், விருண் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (06.11.2022) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கீரிமலை இந்து மயானத்திற்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொ.பே:
0777 2962 16, 0777 448 481

தகவல்:
குடும்பத்தினர்

(CS 21505) 1/6

# மரண அறிவித்தல்

பிறப்பு 01 . 11 . 1932



இறப்பு 02 . 11 . 2022

புங்குடுதீவு 3ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் நாவலர் வீதி, ஆனைப்பந்தியை வசிப்பிடமாகவும் கொண்ட **மலாயன் கபேயின் ஸ்தாபகர் காலஞ்சென்ற மூ.கு.கதிரவேலு** அவர்களின் அன்பு மனைவி

## கதிரவேலு சிவயோகம்

அவர்கள் கடந்த 02.11.2022 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்தம்பி - நல்லம்மா தம்பதியரின் கனிஷ்ட புதல்வியும், காலஞ்சென்ற குழந்தைவேல் பொன்னாச்சி தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற கனகசபாபதி, கனகம்மா ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்ற துரையப்பா மற்றும் கமலாம்பாள் ஆகியோரின் மைத்துனியும், சிறீஸ்கந்தராஜா தயாநிதி, சாந்தநிதி, இன்பநிதி, காலஞ்சென்ற சிறிசந்திரகாசன் மற்றும் சகலகலாநிதி காலஞ்சென்ற கிருபாநிதி ஆகியோரின் அன்புத் தாயாரும், செல்வநாதன், மகேந்திரன், காலஞ்சென்ற துரைராசா மற்றும் சகுந்தலா, பிறேம்குமார், யோகேஸ்வரன் ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (06.11.2022) ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிமுதல் 272/1, நாவலர் வீதி ஆனைப்பந்தியில் உள்ள அன்னாரின் இல்லத்தில் பார்வைக்கு வைக்கப்பட்டு, மு.ப. 10.00 மணிக்கு இறுதிக்கிரியைகள் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு நண்பகல் 12 மணிக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

077 8555 602 - மகன்
077 982 5046 - மருமகன்
077 7377 666 - மருமகன்
+447900238823 - மருமகன்

தகவல்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வட்டுக்கோட்டை வாள்வெட்டு ஆலயத்தில் நடக்கவில்லை!

யாழ்ப்பாணம், நவ. 5

கடந்த 30ஆம் திகதி சூரன்போர் அன்று இரவு வட்டுக்கோட்டை சங்கரத்தை பங்குரு முருகன் ஆலயத்தில் வாள்வெட்டு சம்பவம் எதுவும் இடம்பெறவில்லை என்றும் ஆலயத்திலிருந்து சிறிது தொலைவிலுள்ள வீடொன்றிலேயே அவ்வாறான வன்முறை நடைபெற்றதாகவும் ஆலய அறங்காவலர் சபைத் தலைவர் உறுதிப்படுத்தியுள்ளார்.

ஆலயத்தில் இடம்பெற்ற வாய்த்தர்க்கத்தை தொடர்ந்து வாள்வெட்டு இடம்பெற்றதாகவும் அதில் இருவர் காயமடைந்ததாகவும் உதயனில் வெளியான செய்தி தொடர்பில் விளக்கமளித்து அனுப்பி வைத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

(அ-ஒ-5)

ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமஹ

## அகில இலங்கை விஸ்வகர்மகுல சங்கம்
## பொதுக் கூட்ட அறிவித்தல்

மதிப்பிற்குரிய விஸ்வகுல பெரு மக்களே !

**06.11.2022** ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு **திவ்ய மஹால் திருமண மண்டபம்** இலக்கம் 1001 காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணத்தில் சங்கத்தின் பொதுக்கூட்டம் இடம்பெற்று புதிய நிர்வாகத் தெரிவும் இடம்பெறவுள்ளது. அங்கத்தவர்களும் விஸ்வகுலத்தைச் சேர்ந்த 18 வயதிற்கு மேற்பட்ட ஆண், பெண் இருபாலாரும் வருகை தந்து சிறப்பிக்கும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

அ/இ/ விஸ்வகர்மகுல சங்கம்,
213/1, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

ஜெ.மனோகர்
கௌரவ செயலாளர்,
077 236 7494

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



திருமதி
**கனகம்மா சண்முகம்**
(வெள்ளையம்மா)

அளவில்லா தும்பிக்கு
அன்னமிட்ட அன்னையே.
வெள்ளையம்மா நாமம் தரித்த
எங்கள் தாயே...!

முகம் பார்த்து அகம் உணர்ந்து
ஆறுதல் மொழி கூறும்
அன்னைப் பெருங்கடலே

நீ பெற்றிடாத செல்வங்கள் தான்
எத்தனை..எத்தனை....
காலம் பறித்தெடுத்த
உன் பிள்ளைகளோடு
கலந்திட விரைந்தாயோ எம் தாயே...!
உங்கள் நினைவு
எத்தனை காலமானாலும்
எம்மை விட்டு அழியாது அம்மாவே!

மலர்வு 15.07.1940 — உதிர்வு 06.10.2022

அன்னாரின் மரணச்சடங்கிற்கு பல்வேறு வழிகளிலும் எமக்கு ஆறுதல் சொல்லி எமை ஆற்றுபடுத்திய உறவுகளுக்கும், நண்பர்களுக்கும் நேரடியாக வந்து உதவிகளை புரிந்த உள்ளங்களுக்கும் இத் தருணத்தில் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம். இவரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் அந்தியேட்டிக் கிரியைகளும் மதியபோசனமும் இன்று (05.11.2022) சனிக்கிழமை முற்பகல் 11.00 மணியவில் அன்னாரது இல்லத்தில் இடம்பெறுகின்றது.

மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.
(cs.47446) (2.6)
குடும்பத்தினர்

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



**சாணையன் பொன்னையா**
(ஓய்வுபெற்ற இராணுவ உத்தியோகர்தர்)

பெற்றவர்களுக்கு
அன்பு மகனாய்
மனைவிக்கு
நேசக்கணவனாய்
பிள்ளைகளுக்கு
பாசத்தந்தையாய்...

தற்துணிவும்
நம்பிக்கையும்
அறிவும் ஆளுமையும்
சேவையும் சிறப்புமாய்

மண்மீது வாழ்ந்து,
வழிகாட்டிய எம் தந்தையே
எம் உள்ளம் உள்ளவரை
உங்கள் நினைவுகள் அழியாது....

தோற்றம் 03.05.1934 — மறைவு 07.10.2022

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகளும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் நாளை (06.11.2022) **அன்பு அன்னை இல்லத்தில்** முற்பகல் 11.00 மணியளவில் இடம்பெறவுள்ளதால் உற்றார், உறவினர்கள் அனைவரையும் அதில் கலந்துகொண்டு அதன் பின்னர் இடம்பெறும் மதியபோசன விருந்திலும் பங்குபற்றி சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மருதன்குளம் வீதி,
மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

பிறப்பு 22 . 08 . 1942



இறப்பு 03 . 11 . 2022

### திருமதி கனகாம்பிகை சுந்தரலிங்கம்

அரியாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கனகாம்பிகை சுந்தரலிங்கம் 03.11.2022 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - சின்னம்மா தம்பதியரின் கனிஷ்ட புத்திரியும், காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் - யோகம்மா தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற சுந்தரலிங்கம் (ஓய்வுபெற்ற விமானப்படை அதிகாரி) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான பாலசுந்தரம், சிவசோதி மற்றும் பத்மாவதி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான கோகிலம், தாமோதரம்பிள்ளை, கோபாலசிங்கம், யோகராசா, கிருஷ்ணவேணி மற்றும் கலாவதி, காலஞ்சென்ற ராஜலட்சுமி ஆகியோரின் அருமை மைத்துனியும், சிவதர்சினி (லண்டன்), சிவச்சந்திரன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், கேசரன், லெஸ்லி ஆகியோரின் அன்பு மாமியாரும், கஸ்மினி, கீர்த்தனா, விக்னா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

42, விபுலானந்தர் வீதி,
கொழும்புத்துறை மேற்கு, அரியாலை.
(cs.21607) (2.6)
தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

பிறப்பு 12 . 11 . 1954



இறப்பு 01 . 11 . 2022

### செல்வபிரகாசம் விக்னேஸ்வரன்
(நந்தாவில் அம்மன்கோவில் இலிகிதர்)

சண்டிலிப்பாய் வடக்கைப் பிறப்பிடமாகவும் கோண்டாவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வபிரகாசம் விக்னேஸ்வரன் கடந்த (01.11.2022) அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்வபிரகாசம் - இராஜேஸ்வரி தம்பதியரின் கனிஷ்ட்ட புதல்வனும், காலஞ்சென்ற இராமசாமி - இரத்தினமலர் தம்பதியரின் அன்பு மருமகனும், விமலராணி (வசந்தா)வின் அன்புக் கணவரும், கணேஸ்வரன் (Canada), சிவானந்தன் (CTB) ஆகியோரின் அன்புச் சகோதரனும், லவசாந் (IT Project Manager) அவர்களின் அன்புத் தந்தையும், விஷ்ணுகா (Assistant Postmistress ) வின் அன்பு மாமனாரும், அஹன்யனின் அன்புப் பேரனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (06.11.2022) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

35, புகையிரத நிலைய வீதி,
கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்.
(cs.21607) (2.6)
தகவல்: குடும்பத்தினர்.
077 786 3094

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம் 29 . 12 . 1956



மறைவு 02 . 11 . 2022

## அமரர் சபாரத்தினம் நாகராசா

யாழ்ப்பாணம் சங்கானை இலுப்பத்தாள் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் ஆண்டாள் செட்டிவெளி நானாட்டான் மன்னாரை இடைக்கால வதிவிடமாகவும் தற்போது 384A, திருநாவற்குளம், தாண்டிக்குளம், வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் சபாரத்தினம் நாகராசா அவர்கள் (02.11.2022) புதன்கிழமை அன்று இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சபாரத்தினம் நல்லம்மா தம்பதிகளின் அன்பு மகனும் மயில்வாகனம் இராஜேஸ்வரி தம்பதிகளின் அன்பு மருமகனும், பராசக்தியின் அன்புக் கணவரும், சர்மிளா (சுவிஸ்), டீலீப்குமார் (வவுனியா), கோபாலகிருஷ்ணன் (லண்டன்), காலஞ்சென்ற மகாராஜா மற்றும் பிரேமிளா (இத்தாலி), மோகன்ராஜ் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் விக்கினேஸ்வரன் (பிரான்ஸ்), தர்சிகா (வவுனியா), செந்தில்ரூபன் (இத்தாலி), டக்ஷனா (லண்டன்), ஆகியோரின் அன்புமாமனாரும் அக்ஷிரா, ஆதேஸ் (லண்டன்), யர்ஷனா (வவுனியா), ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (06.11.2022) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பத்தினியார்மகிழங்குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றர் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 384 A,
திருநாவற்குளம், தாண்டிக்குளம்.
வவுனியா.

தகவல் :
குடும்பத்தினர்.
0778606260, 0772125525

# மரண அறிவித்தல்

தோற்றம் 03 . 09 . 1981



மறைவு 04 . 11 . 2022

## நடராசா சுஜீதரன் (தரன்)

**(உரிமையாளர் - ஜெய்சாயி கடைச்சல் தொழிலகம்)**

கொட்டடி மீனாட்சி அம்மன் கோயிலடி யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், 12/10, கலிமா வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா சுஜீதரன் (தரன்) அவர்கள் நேற்று (04.11.2022) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் நடராசா புஷ்பராணி தம்பதியரின் அன்பு மகனும், விஜயரட்ணம் விமலா தம்பதியரின் அன்பு மருமகனும், நிஷாந்தினி (யாழ் போதனா வைத்தியசாலை-பரிசாரகர்) அவர்களின் பாசமிகு கணவரும், கிஷோர், மானுசா ஆகியோரின் அன்புத் தந்தையும், சுஜீதா (கவிதா), சுதர்சன் (குகன்), சுகதீசன், சுதர்ஜினி ஆகியோரின் அன்புச் சகோதரனும், உஷாநந்தினி (யாழ். மாநகரசபை - சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை), வேங்கைமாறன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், சின்ராசா, தவராசா, நகுலேஸ்வரன், சத்தியசீலன் ஆகியோரின் பெறா மகனும், கமலாதேவியின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற வேலாயுதம் மற்றும் மாணிக்கம் தம்பதியரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (06.11.2022) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

12/10, கலிமா வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்: குடும்பத்தினர்.
077 068 3898
077 9583 902
076 165 4698

(CS 21628) 1/6

# மரண அறிவித்தல்

தோற்றம் 12 . 12 . 1945



மறைவு 03 . 11 . 2022

## கந்தையா தர்மநாயகம்

**(இ.போ.ச.மேனாள் முகாமையாளர் – யாழ்சாலை)**

நெடுந்தீவை பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தையும், உருத்திரபுரத்தையும் வதிவிடமாகக் கொண்டவருமான கந்தையா தர்மநாயகம் (இ.போ.ச. மேனாள் முகாமையாளர் - யாழ் சாலை) அவர்கள் கடந்த (03.11.2022) வியாழக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா (சின்னமணி மாஸ்ரர் - ஓய்வுபெற்ற அதிபர்) லட்சுமி ஆகியோரின் அன்பு மகனும், கந்தையா (அமரர்), பொன்னம்மா ஆகியோரின் அன்பு மருமகனும் பிரியசாந்தாவின் அன்புக் கணவரும் அமரர் தர்மலிங்கம் (அதிபர்), தர்மரத்தினம் (அவுஸ்திரேலியா), தர்மகுலசிங்கம் (லண்டன்), தர்மசூரியர் (தலைவர் கிளிநொச்சி மாவட்ட திருநெறி கழகம்), கோசலாதேவி (அமரர்), கேதீஸ்வரி (கனடா), புனிதராணி (அவுஸ்திரேலியா), காந்திமதி (நோர்வே) ஆகியோரின் அன்புச் சகோதரனும் நேருஜி (சுரேஸ் - கனடா), யசீந்திரன் (ரமேஷ்), ரஜனி (பிரியா ஆசிரியர் வட்டக்கச்சி மத்தியகல்லூரி), ராஜினி (வித்தியா) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஜகிசன், அபிசன், சகேஸ்னா ஆகியோரின் அன்புப் பேரனும் கணேசலிங்கம் (கலா கணேசன் - பிரதேசசபை உறுப்பினர்),அமரர் புவனேந்திரராசா (விளையாட்டு உத்தியோகத்தர்), மகேஸ்வரன் (கருணா - பிரான்ஸ்), விக்கினேஸ்வரன் (கிருபா - கனடா), குககுமாரராஜ் (குகா கரைச்சி தெற்கு ப.நோ.கூ சங்கம் எரிபொருள் நிரப்பு நிலைய முகாமையாளர்), பிரபாகரன் (பிரபா - உரிமையாளர் மாணிக்கப்பிள்ளையார் பந்தல் சேவை) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (06.11.2022) ஞாயிற்றுக்கிழமை 126, D-10 உருத்திரபுரம் கிளிநொச்சியிலுள்ள அவரின் இல்லத்தில் பிற்பகல் 2.00 மணியளவில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக உருத்திரபுரத்திலுள்ள உறவுகள் துயிலகத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

தோற்றம் 10 . 05 . 1939



மறைவு 04 . 11 . 2022

## அமரர் திரு.சுப்ரமணியம் கனகராஜேஸ்வரன்

(Rtd Estate Apothecary Cum Pharmacist McLeod Hospital Inuvil)

கோப்பாயைப் பிறப்பிடமாகவும் காங்கேசன்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் கனகராஜேஸ்வரன் நேற்று (04.11.2022) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்ரமணியம் கண்மலர் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற பொன்னையா இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் பராசக்தி (இளைப்பாறிய ஆசிரியை யாழ்.யூனியன் கல்லூரி, வீமன்காமம் மகாவித்தியாலயம், சிரேஷ்ட விரிவுரையாளர் தொலைக் கல்வி) அவர்களின் ஆருயிர் கணவரும் மிதிலா அவர்களின் அன்புத் தந்தையும் யோகேந்ரன் அவர்களின் அருமை மாமனாரும் நிலாகினி, ஹிருஷிகேஷ் அவர்களின் அருமை அம்மப்பாவும் நடராஜா-இரத்தினமணி அவர்களின் அருமை சம்பந்தியும் காலஞ்சென்ற பரமேஸ்வரன் (சட்டத்தரணி), தர்மராஜேஸ்வரன் (மக்கள் வங்கி முகாமையாளர்), ஜெகதீஸ்வரி (ஆசிரியை), ஜதிந்திரேஸ்வரன் மற்றும் விமலேஸ்வரி, மகேஸ்வரன், குலராஜராஜேஸ்வரி, தாயனந்தேஸ்வரன், ஜெயமங்களேஸ்வரி ஆகியோரின் அருமைச்சகோதரனும் திலகவதி (இளைப்பாறிய ஆசிரியை), நாகராஜேஸ்வரி, காலஞ்சென்ற சிவலோகநாதன் (விரிவுரையாளர் தொழில்நுட்பக் கல்லூரி), இராஜராஜேஸ்வரன் (இளைப்பாறிய விரிவுரையாளர் - மருத்துவ பீடம்) மணிமேகலை, விஜயரட்ணம் ஆகியோரின் மைத்துனரும் பகீரதன், தார்மீகன் ஆகியோரின் சித்தப்பாவும் வசீகரன், மயூரன், திருமால்மருகன், திருமுருகன், திருச்செந்தூரன் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஞானசக்தி காலஞ்சென்ற துரையப்பா (கூட்டுறவு பரிசோதகர்) மற்றும் நாகரட்ணம் (இளைப்பாறிய ஆசிரியை யூனியன் கல்லூரி), தவராஜா (இளைப்பாறிய பொறியியலாளர்) ஆகியோரின் மைத்துனரும் காலஞ்சென்ற குணரட்ணம் மற்றும் சரஸ்வதி, சிவஞானராஜா (இளைப்பாறிய இ.போ.ச உத்தியோகத்தர்), இரஞ்சினி (சட்டத்தரணி) ஆகியோரின் சகலனும் கோபிராஜ், புவிராஜ், சிவரதன், சிவரதனி ஆகியோரின் பெரிய தந்தையும் தரணிதரனின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (06.11.2022) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தச்சன்காட்டு இந்து மயானதிற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் : குடும்பத்தினர்.
திருமதி பராசக்தி கனகராஜேஸ்வரன் (மனைவி) +94776255326
மிதிலா (மகள்) - +94755906858

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கூடுதலான...**

போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சில் கடந்த மாதம் 26ஆம் திகதி இடம்பெற்ற கலந்துரையாடலின்போது, மேலதிகமாக எரிபொருள் தேவைப்படும் முச்சக்கரவண்டிகளை மென்பொருளினூடாகப் பதிவுசெய்வதற்கான நடவடிக்கையை அந்தந்த மாகாணங்களுக்குரிய வீதிப்பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் ஊடாக மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டிருந்தது. இந்த அறிவுறுத்தலுக்கு அமைவாகவே வடக்கு வடமாகாணத்தில் மேலதிகமாக எரிபொருள் தேவைப்படும் முச்சக்கரவண்டிச் சாரதிகள், தமது பதிவுகளை அந்தந்த மாவட்ட செயலகங்களில் உள்ள வீதிப்போக்குவரத்து அதிகார சபையின் அலுவலகங்களில் மேற்கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ம)

**ரயிலுடன்...**

குறித்த இளைஞர் தவறான முடிவெடுத்து, காங்கேசன்துறையில் இருந்து கொழும்பு கோட்டை நோக்கி பயணித்த குளிரூட்டப்பட்ட ரயிலுடன் மோதுண்டுள்ளார். இதையடுத்து படுகாயங்களுடன் மீட்கப்பட்ட அவர், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டார். எனினும் சிகிச்சை பயனளிக்காமல் அவர் நேற்று மாலை உயிரிழந்தார். குறித்த சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாணம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேமகுமார் மேற்கொண்டார். (அ-ம-26)

**காணி விற்பனைக்கு**

தாவடி மானிப்பாய் வீதி, தாவடி வடக்கில் 1 1/2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 077 255 0807

**காணி விற்பனைக்கு**

58/1, பழம் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம் என்ற முகவரியில் 3பரப்பு காணி விற்பனைக்குண்டு. (பலாலி வீதி, திருநெல்வேலி கெற்றப்போல் சந்தியிலிருந்து பழம் வீதியில் சுமார் 200 m தூரம் அளவில்) இரண்டாகப் பிரித்தும் வாங்கலாம்.

00447459925292, 0774174651



**இலவச அமெரிக்க லொத்தர் விசா**

வருடம்தோறும் 55000 பேர் அமெரிக்கா செல்லும் அரிய சந்தர்ப்பத்தினை தவறவிடாதீர்கள்.

இன்னும் 4 நாட்கள் மட்டுமே உள்ளன. இன்றே விரையுங்கள்

திருமுருகன் கொம் நெற் பிறைவேட் லிமிட்டெட்

தொடர்புகளுக்கு : 0777554528 321, K.K.S.வீதி, யாழ்ப்பாணம்.

# பதவி வெற்றிடம்

எமது நிறுவனத்திற்கு பின்வரும் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் வேண்டப்படுகின்றன.

1. Bill Clerk ( 30 - 50 வயதுவரை)
2. Sales Man
3. Sales Representative (Hardware)
4. Driver

முன் அனுபவம் விரும்பப்படும்

**விண்ணப்பிக்கவேண்டிய முகவரி:**

Narayana Hardware Traders
168, Stanley Road, Jaffna.

**அமெரிக்க லொத்தர் இலவச விசா**

இன்னும் இரண்டு நாட்களில் பதிவுகள் நிறைவடைகின்றன

ஏமாற்றங்களை தவிர்க்க உடனே பதியுங்கள்

Passport அவசியமில்லை

18 வயதிற்கு மேற்பட்ட யாரும் தனியாக விண்ணப்பிக்கலாம்

இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற இரண்டு வாய்ப்புக்கள்

இந்த வருடம் A/L எடுக்கிறவர்களும் விண்ணப்பிக்கலாம்

வெளிநாட்டு உதவி இல்லாதவர்களுக்கும் வெளிநாடு செல்ல காசு இல்லாதவர்களுக்குமான ஒரே ஒரு அரிய சந்தர்ப்பம்

**V2 Travels**

இதுவரை எமக்கூடாக விண்ணப்பித்த நூற்றுக்கணக்கானோர் அமெரிக்காவில் குடும்பத்துடன் வசிக்கின்றார்கள்

0768226244

**நன்றி நவிலலும் 31 ஆம் நாள் நினைவஞ்சலியும்**



மண்ணில் 12.07.1942 — விண்ணில் 06.10.2022

கடந்த (06.10.2022) வியாழக்கிழமை இறைபதமடைந்த எமது குடும்பத்தலைவி

**அமரர் சூசைமுத்து இராசமணி**

அவர்களின் மறைவு செய்தி கேட்டு நேரில் வருகை தந்தும் மற்றும் தொலைபேசி ஊடாகவும் எமது துயரில் பங்குகெடுத்து இறுதிக் கிரியையிலும் கலந்துகொண்ட அனைவருக்கும் எமது நன்றியினை தெரிவித்துக்கொள்கின்றோம்.

அத்துடன் இன்று (05.11.2022) சனிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறவிருக்கும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று இந் நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்

வளாக வீதி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
077 750 6488, 077 666 5854

பிரிவால் துயருறும் குடும்பத்தினர்

(c-21475)(2.6)

# காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கைதடி A9 பிரதான வீதியுடன் 3 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

**நிலப்பரப்பு.**

- நல்ல தண்ணீரூற்றுச் சூழல்
- அனைத்து விதமான வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும்
- வீடுகள் கட்டுவதற்கும் உகந்த இடம்.

**பார்வையிடும் நேரம்:-**

- காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை

தரகர் தேவையில்லை.

**தொடர்பு:- ஜெயம்**
**077 814 7389**
**077 986 5457**

# அறிவித்தல்

**இலங்கை மதுபான சாலைகளின் உரிமையாளர் சங்கத்தின் கூட்டம் எதிர்வரும் நவம்பர் 7ஆம் திகதி யாழ் நகரில் உள்ள Jetwin hotel இல் காலை 9.45** மணியளவில் நடைபெறவுள்ளது. ஆகையால் யாழ். பிரதேசத்தில் உள்ள அனைத்து மதுபானசாலை உரிமையாளர்களும் வருகை தந்து தங்களது கருத்துக்களை கலந்துரையாடுமாறு மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

(CR 38433) (3/6)

**இலங்கை மதுபானசாலை உரிமையாளர்கள் சங்கம்**

# SAM LANKA

DIRECT IMPORTERS & DISTRIBUTORS

NO:- 367 NAVALAR ROAD, ILLUPPAIYADY JUNCTION, JAFFNA

021 222 1002, 0094 777 46 58 48, 0094 778 20 94 24

SAM LANKA 25% OFF VALID TILL 30th NOVEMBER 2022

KEVILTON Power to Innovate — SWITCHES, ISOLATOR, RCCB, BREAKERS, LED LIGHTS, LED PANEL LIGHTS

ORANGE ELECTRIC — SWITCHES, ISOLATOR, RCCB, BREAKERS, LED LIGHTS, LED PANEL LIGHTS

Wireman — ALL KINDS OF LED LIGHTS

Panasonic — ALL KINDS OF LED LIGHTS

AKRA — ALL KINDS OF LED LIGHTS



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 05.11.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org